Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, OCTOBER 27, 2022

வியாழக்கிழமை ஒக்டோபர் 27, 2022 | ஒளி: 08 கதிர்: 130 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | Free





## இளையோரிடையே எச்.ஐ.வி தொற்று உயர்வு

இந்த வருடத்தின் முதல் 9 மாதங்களில், 18 முதல் 30 வயதுக்கு இடைப்பட்டவர்களில் 50 பேருக்கும் அதிகமானவர்களுக்கு எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என்று தேசிய பாலியல் மற்றும் எயிட்ஸ் தடுப்புப்பிரிவின் பணிப்பாளர், விசேட வைத்திய நிபுணர் ராசாஞ்சலி ஹெட்டியாரச்சி தெரிவித்தார். இவ்வாறு தொற்றுக்கு உள்ளானவர்களில் பெரும்பாலானோர் ஆண்கள் எனவும் அவர்களில் பல்கலைக்கழக மாணவர்கள் 13 பேர் மற்றும் பாடசாலை மாணவர்கள் அடங்குவதாகவும் சுட்டிக்காட்டினார். மேற்குறிப்பிட்ட வயது எல்லைக்கு உட்பட்டோரில் 25 பேர் மாத்திரமே கடந்த வருடம் அடையாளம் காணப்பட்டதாகத் தெரிவித்த அவர், நாட்டில் எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை இரட்டிப்பாக அதிகரித்துள்ளது என்றார். கடந்த வருடத்தின் முதலாவது அரையாண்டுக்குள் 148 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதாகவும் இந்த வருடம் 342 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களிலேயே அதிக எச்.ஐ.வி தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், பாடசாலைகளில் பால்நிலை கல்வியை உரிய முறையில் பெற்றுக் கொடுக்காமையே இவ்வாறான தொற்று நோய்கள் அதிகம் பரவுவதற்கு காரணம் என்றார். தொற்று ஏற்பட்டிருக்கக்கூடும் என சந்தேகிக்கும் நபர்கள் உடனடியாக மருத்துவ பரிசோதனைகளை மேற்கொள்வது சிறந்தது. போதைப்பொருள் பாவனையாலும், குழுவாக கலந்துகொள்ளும் விருந்துகள் போன்ற சமூக நிகழ்வுகளாலும் இளைஞர்கள் அதிகளவில் தொற்றுக்குள்ளாவதாக சுட்டிக்காட்டினார்.

### இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர்கள்

# எம்மில் எவருமில்லை



தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பத்து பாராளுமன்ற உறுப்பினர்களில் எவருமே இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர்கள் அல்லவென கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் தெரிவித்தார்.

இரட்டைப் பிரஜாவுரிமை கொண்ட ஒருவர் தேர்தலில் போட்டியிட முன்வந்து, அது தொடர்பில் யாராவது ஆட்சேபத்தை தெரிவித்தால் அவரது பெயரை நிராகரிக்கின்ற அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்கப்படவில்லை. ஏனெனில், அவ்வாறான ஆட்சேபனைகளை விசாரித்து உண்மைகளை கண்டறிய அவர்களுக்கு கால அவகாசம் போதாது என்றார்.

அவர்கள் தேர்தலில் தெரிவு செய்யப்பட்டால் நீதிமன்றத்தின் ஊடாக அதனை கேள்விக்குட்படுத்தி அவரது பதவியை பறிக்க முடியும். கீதா குமாரசிங்கவின் விடயத்திலும் இதுவே நடந்தது. இதனை எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம் என்பதில் நாங்கள் ஆராய்ந்து இருக்கின்றோம் என்றார்.

தேர்தலில் வேட்பாளரொருவர் போட்டியிடும் போது தேர்தல் ஆணைக்குழு அவரிடமிருந்து ஒரு சத்திய கடதாசியை பெற்றுக்கொண்டு தேர்தலில் போட்டியிட அனுமதிக்கலாம். அதன் பின்னர் குறித்த வேட்பாளரது பிரஜாவுரிமை தொடர்பில் நீதிமன்றத்தில் யாராவது கேள்விக்குட்படுத்தினால் அவரது பாராளுமன்ற உறுப்பினர் பதவி பறிக்கப்படுவதுடன் அதற்கு

தொடர்ச்சி P2



# இரட்டை பிரஜாவுரிமையை தேடிப்பார்க்க முடியாது

இரட்டை பிரஜாவுரிமை கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களை வெளிப்படுத்தும் முறைமையொன்று அரசாங்கத்திடம் இல்லை. அவ்வாறு இரட்டை பிரஜாவுரிமை கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர் பட்டியலை தேடிப்பார்த்து நடவடிக்கை எடுக்க முடியாதென அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பு நேற்று (26) அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. இதன்போதே அவர் இதனை தெரிவித்தார்.

தற்போது நிறைவேற்றப்பட்டுள்ள 22ஆம் திருத்தச் சட்டத்துக்கு அமைய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் இரட்டை பிரஜாவுரிமையை கொண்டிருக்க முடியாது. அவ்வாறு இருக்குமென்றால் நீதிமன்றத்தால் நடவடிக்கை எடுக்க முடியும். ஆனால் இதனை தேடிப்பார்க்கும் பொறிமுறை ஒன்று அரசாங்கத்திடம் இல்லை. அரசாங்கத்தால் இதனை தேடிப்பார்த்து நடவடிக்கை எடுக்கவும் முடியாது என்றார்.

### இலங்கையில் பொருளாதார நெருக்கடி

## உணவுப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

இலங்கையில் உக்கிரமடைந்து வரும் பொருளாதார நெருக்கடியானது, நாட்டின் உணவுப் பாதுகாப்புக்கு பாரிய அச்சுறுத்தலாக காணப்படுவதாக ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளது.

இவ்வாண்டு ஒக்டோபர் முதல் அடுத்த ஆண்டு பெப்ரவரி வரையிலான காலப்பகுதியில் இந்த நிலைமைகள் மேலும் மோசமடையக்கூடும் எனவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

WFP World Food Programme

தொடர்ச்சி P2

### யால விவகாரம்

## சரணாலயத்தில் சரணடைந்த 9 பேரும் பிணையில் விடுவிப்பு



யால தேசிய சரணாலயத்துக்குள் வாகனங்களைச் செலுத்தி, வன விலங்குகளை துன்புறுத்திய சம்பவம் தொடர்பில், யால சரணாலய அதிகாரிகளிடம் நேற்று (26) சரணடைந்த பின்னர் கைது செய்யப்பட்ட ஒன்பது பேரையும் தலா 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்குமாறு திஸ்ஸமஹாராம நீதவான் தரிந்து சமிர சில்வா,

தொடர்ச்சி P2

## 38 நிலக்கரி கப்பல்களில் ஒன்று வந்தடைந்தது

### அடுத்த கப்பல் திங்கள் வரும் என்கிறார் அமைச்சர்



நுரைச்சோலை 'லக்விஜய' நிலக்கரி அனல்மின் நிலையத்துக்கு இந்தப் பருவத்துக்குத் தேவையான 38 நிலக்கரி ஏற்றுமதிகளில் முதலாவது ஏற்றுமதியை சுமந்து வந்த கப்பல் நேற்று முன்தினம் (25) இரவு கொழும்பை வந்தடைந்தடைந்தாகத் தெரிவித்த மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, இரண்டாவது நிலக்கரி கப்பல் எதிர்வரும்

தொடர்ச்சி P2

### அரசாங்க ஒப்பந்தக்காரர்களுக்கு

## ரூ.20 பில்லியன் வழங்கப்படும்



பல கட்டங்களின் கீழ் அரசாங்க ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்க வேண்டிய பணத்தை உடனடியாக வழங்குவதில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். இதன்படி, இவ்வருட இறுதிக்குள் 20 பில்லியன் ரூபாய் நிதி வழங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த வருடத்தின் முதல் காலாண்டில் எஞ்சியுள்ள அனைத்து நிலுவைகளையும் செலுத்த அரசாங்கம் தற்போது செயற்பட்டு வருவதாகவும் ரணதுங்க மேலும் கூறினார்.

தொடர்ச்சி P2

### இலங்கையின் கடன் மறுசீரமைப்பில்


## கடன் வழங்குநர்கள் ஆதரவளிக்கத் தயார்



இலங்கையின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் குறித்து கடன் வழங்கியவர்களுடன் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகளின் போது இலங்கைக்கு ஆதரவளிப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர் என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார். இலங்கையின் கடன்களை மறுசீரமைப்பது தொடர்பான பேச்சுவார்த்தையின் போது இந்த உறுதிமொழி வழங்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## சர்வதேச ஒத்துழைப்புடன் மீள்வதற்கு முயல்கிறோம்



பொருளாதாரத்தை மீண்டும் வளர்ச்சியின் பாதையில் கொண்டு செல்வதற்கு அவசியமான சகல விதமான முயற்சிகளையும் அரசாங்கம் முன்னெடுப்பதாகவும், சர்வதேச தரப்பின் ஒத்துழைப்புடன் இதனை வெற்றிகொள்ள தேவையான சகல வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## 'அபயம்' அறிமுகம்

சிறுவர் மற்றும் மகளிர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வினைப் பெற்றுத்தரும் நோக்குடன் வடமாகாண ஆளுநரின் பணிப்புக்கு அமைய 'அபயம்' அவசர தொலைபேசி இலக்கம், ஒக்டோபர் 25ஆம் திகதி முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## வெடுக்குநாரி, குருந்தூர் மலைக்கு விரைவில் சுமுகமான தீர்வு



முல்லைத்தீவு, குருந்தூர் மலை மற்றும் வவுனியா, வெடுக்குநாரி விவகாரங்களை சுமூகமாகத் தீர்த்து வைக்கும் வகையில் அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, விஜதாஸ ராஜபக்ஷ ஆகியோர் நவம்பர் முதலாவது வாரத்தில் குறித்த பகுதிகளுக்கான நேரடி விஜயத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து,

தொடர்ச்சி P2

## "கஞ்சாவை நம்புகிறேன்"

### அமைச்சர் சிசிர



கஞ்சா பயிர்ச்செய்கையை சட்டபூர்வமாக்கும் அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு உள்ளதாகவும், இதற்கான சட்ட ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் குறித்த பத்திரத்துக்கு அமைச்சரவை அனுமதி கிடைக்குமென

தொடர்ச்சி P2

### களுத்துறை சிறைச்சாலையில்

## டக்ளஸை தாக்கிய இருவருக்கு 22 வருட கடூழிய சிறைத்தண்டனை

களுத்துறை சிறைச்சாலையில் வைத்து, தற்போதைய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீது தாக்குதல் நடத்தினர் என்று குற்றஞ்சாட்டப்பட்ட இருவர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து, அவர்களுக்கு 15 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 22 வருட கடூழிய சிறை தண்டனை விதித்து, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க, நேற்று (26) தீர்ப்பளித்தார்.

குற்றவாளிகள் இருவருக்கும் தலா 40 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்த நீதிபதி, பிரதிவாதிகள் இருவரும் டக்ளஸ் தேவானந்தாவுக்கு தலா 1 இலட்சம் வீதம் நட்டஈடு வழங்க வேண்டும் என்றும் தீர்ப்பளித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# எம்மில் எவருமில்லை

மேலதிகமாக பொய் சாட்சி சொன்ன குற்றத்திற்காக அவருக்கு தண்டனையையும் விதிக்க முடியும் என்றார்.

இவ்வாறான ஏற்பாடு கொண்டுவரப்பட்டால் இரட்டை பிரஜாவுரிமை கொண்ட பலரும் தேர்தலில் போட்டியிட பின்னடிப்பார்கள். புதிய திருத்தத்தின்படி இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர்கள் தற்போதுள்ள பாராளுமன்றத்தில் அங்கம் வகித்தால் அவர்கள் தொடர்ந்து பாராளுமன்றத்தில் அங்கம் வகிப்பதற்கான தகுதியை இழப்பார்கள்.

இரட்டை பிரஜாவுரிமை உள்ள பலர் தற்போதைய பாராளுமன்றத்தில் இருக்கிறார்கள் என்ற செய்தி எமக்கு கிட்டியுள்ளது. அது தொடர்பில் ஆராய்ந்து அவர்களை நீக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றார்.

# உணவுப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

கொழும்பின் நகர்ப்புறங்களில் பொருட்களின் விலைகள் தொடர்ந்து அதிகரித்து வருவதானது, சமூகத்தின் ஏற்கெனவே பாதிக்கப்படக்கூடிய மக்கள் பிரிவினரை மேலும் நெருக்கடிக்குள் உள்ளாக்கும்.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் படி, உணவுப் பணவீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு) ஒகஸ்ட் மாதத்தில் 93.7% ஆக இருந்து, செப்டம்பரில் 94.9% ஆக உயர்ந்துள்ளது. இலங்கையில் உணவு உதவித் திட்டங்களைத் தொடர 2022 ஒக்டோபர் மற்றும் அடுத்த ஆண்டு மார்ச் வரை சுமார் 28.86 மில்லியன் டொலர்கள் தேவைப்படுவதாக உலக உணவுத் திட்டம் மதிப்பிட்டுள்ளது.

# 38 நிலக்கரிக் கப்பல்களில் ஒன்று வந்தடைந்தது

திங்கட்கிழமை (31) நாட்டை வந்தடையும் என்று தெரிவித்தார்.

குறித்த மின் நிலையத்துக்கு தேவையான நிலக்கரிக்கான நிதி ஒதுக்கீடு மற்றும் கொள்வனவு நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை நிலக்கரி கம்பனி அதிகாரிகளுடன், நேற்று (26) காலை முன்னேற்ற மீளாய்வு கூட்டம் இடம்பெற்ற போதே அமைச்சர் மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

நாட்டை வந்தடைந்த குறித்த கப்பலில் இருந்து நிலக்கரியை தரையிறக்கும் பணிகள் நேற்று (26) ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்தின் மின் உற்பத்தி நடவடிக்கைகளை இடையூறின்றி முன்னெடுத்துச் செல்ல முடியும் என இலங்கை நிலக்கரி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னர் ஒப்பந்தம் செய்யப்பட்ட நிறுவனத்தின் குறித்த கப்பல் நாட்டுக்கு வரவழைக்கப்பட்டதுடன், எதிர்வரும் டிசம்பர் மாதம் 04ஆம் திகதிக்கு முன்னர் குறித்த நிறுவனத்தின் மேலும் 04 கப்பல்கள் நாட்டை வந்தடையவுள்ளன.

இதேவேளை, டிசெம்பர் 31 வரை தொடர்ச்சியான மின்சார விநியோகத்தை வழங்குவதற்கு குறைந்தபட்சம் எட்டு நிலக்கரி ஏற்றுமதிகளை இலங்கை வாங்க வேண்டும் என்றும் 8 ஏற்றுமதிகளை இறக்குமதி செய்வதற்கு 171 மில்லியன் டொலர்கள் தேவைப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கடன் வழங்குநர்கள் ஆதரவளிக்கத் தயார்

"இலங்கை - பொருளாதார நிலை" என்ற தலைப்பில் கொள்கை ஆய்வுகள் நிறுவகத்தினால் தொகுக்கப்பட்ட அறிக்கையை வெளியிடும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துதல் மற்றும் உற்பத்தி இழப்புகளை மீளப் பெறுதல் ஆகிய இரண்டு பிரச்சினைகளையும் தீர்க்கும் நடவடிக்கைகள் தற்போதே ஒன்றாகச் செயற்படுத்தப்பட்டால் மட்டுமே தீர்க்கப்படும். வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும் ஏற்றத்தாழ்வுகளை சரிசெய்வதற்கும் இலங்கையில் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார்.

சர்வதேச நாணயநிதியத்தின் ஆதரவை பெறுவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் உத்தேச வரி சீர்திருத்தம் ஆகியவை குறித்து கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. ஆனால் தீர்வுகளுக்கு மாற்று யோசனைகளை முன்வைக்காமல் அதிகாரத்தில் உள்ளவர்கள் முன்வைக்கும் திட்டங்களை விமர்சனம் செய்வது சுலபம். விமர்சனங்கள் இருக்க வேண்டும் என்பது உண்மையே, ஆனால் விமர்சனங்களை முன்வைப்பவர்கள் மாற்று திட்டங்களை முன்வைக்கவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கான வாய்ப்பு மீண்டும் கிடைக்காது. அதேபோல், கடன்களை திருப்பி செலுத்துவதற்கு ஸ்திரமான பொருளாதாரமும் வலுவான வங்கி கட்டமைப்பும் அவசியம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# சரணாலயத்தில் சரணடைந்த 9 பேரும் பிணையில் விடுவிப்பு

நேற்று (26) கட்டளையிட்டார்.

கடந்த சனிக்கிழமை 33 ஜீப்களில் சுமார் 100 பேருடன் யால சரணாலயத்துக்குள் பிரவேசித்த குழுவினர், வாகனங்களில் வட்டமடித்தும் முறையற்ற விதத்தில் வாகனங்களை செலுத்தியும் வன விலங்குகளை துன்புறுத்தியிருந்தனர்.

இது தொடர்பில் 7 வாகனங்கள் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், 7 சாரதிகள் மற்றும் வீடியோ எடுத்த இருவர் அடங்கலாக 9 பேர் சரணடைந்துள்ளனர்.

யால சரணாலயத்தில் டிபெண்டர்கள், ஜீப்களில் அவர்கள் பயணித்த விதம் தொடர்பான பல காணொளிகள் சமூக ஊடகங்களில் வெளியானதையடுத்து வனஜீவராசிகள் திணைக்களத்தினால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டது.

விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சரின் பணிப்புரைக்கு அமைய திணைக்களத்திடம் உள்ள ஆதாரங்களைக் கொண்டு நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்து மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக திணைக்களம் தெரிவித்திருந்தது.

இதேவேளை, குறித்த குழுவினருடன் சென்ற வனவிலங்கு அதிகாரி மற்றும் வழிகாட்டிகள் அறுவர் உட்பட 7 பேர் பணி இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களிடம் விசாரணைகளையும் திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

அத்துடன், குறித்த சம்பவம் தொடர்பில் உயர் அதிகாரிகளுக்கு அறிவிக்காத அதிகாரிகள் தொடர்பில் விசாரணை நடத்த மூவரடங்கிய குழுவொன்றை நியமிப்பதற்கு வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரா ஹேரத் தீர்மானித்துள்ளார்.

மேலும், குறித்த நபர்கள் மற்றும் வாகனங்கள், இலங்கையிலுள்ள எந்த தேசிய பூங்காவுக்கும் 3 வருடங்களுக்கு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் நபர்களும் அவர்கள் பயணித்த வாகனங்களும் கறுப்பு பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் வன ஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ரூ.20 பில்லியன் வழங்கப்படும்

இது தவிர கட்டுமானத் துறையில் இருப்பவர்களுக்கு சலுகைகள் வழங்குவது குறித்தும் ஆராய நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் தலைமையில் குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு இந்த வாரம் கூடி எதிர்கால நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயும் என்றும் அமைச்சர் கூறினார்.

இந்த நாட்டில் கட்டுமானத் தொழிலில் கிட்டத்தட்ட 10 இலட்சம் பேர் நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலை செய்கிறார்கள். கொவிட் தொற்று பரவியதன் காரணமாக ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியில் இலங்கையில் கட்டுமானத்துறை கடும் பின்னடைவைச் சந்தித்துள்ளது என்றார்.

பொருளாதார நெருக்கடி, இறக்குமதி கட்டுப்பாடுகள், விநியோகம் மற்றும் போக்குவரத்தில் தாமதம், வங்கி வசதிகள் கட்டுப்பாடு, அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு சரிவு, எரிபொருள் விலை உயர்வு, கட்டுமானப் பொருட்களின் தட்டுப்பாடு போன்றவை கட்டுமானத் துறையை பாதித்தது. இந்நிலைமை காரணமாக ஒப்பந்தக்காரர்களுக்கு அரச நிறுவனங்களால் வழங்கப்பட வேண்டிய 122 பில்லியன் ரூபாய் பணம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்றார்.

# சர்வதேச ஒத்துழைப்புடன் மீள்வதற்கு முயற்சிக்கிறோம்

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க திறைசேரியின் பிரதி உதவி செயலாளர் றொபர்ட் கப்ரோத், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடியிருந்தார். நேற்று முன்தினம் (25) இடம்பெற்ற இந்த சந்திப்பில், சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு அமைய பொருளாதார சீர்திருத்தங்களை அமல்படுத்தும் இலங்கையின் திட்டங்கள் தொடர்பில் றொபர்ட் கப்ரோத் ஜனாதிபதியுடன் கலந்துரையாடியுள்ளார்.

பொருளாதாரத்தை மீண்டும் வளர்ச்சியின் பாதையில் கொண்டு செல்வதற்கு அரசியல் விருப்பமும் வலுவான நடவடிக்கைகளும் அவசியம் என்பதையும், நிலையான அரசியல் கொள்கையும். உறுதியான வேலைத்திட்டங்களுமே இதனை வெற்றிகொள்ள முக்கிய காரணியாக அமையும் என்பதையும் றொபர்ட் கப்ரோத் வலியுறுத்தியுள்ளார். மேலும், ஜனநாயக சட்டகத்திற்குள் இருந்தே சகல விதமான தீர்மானங்களையும் எடுக்க வேண்டும் என்பதை அவர் சுட்டிக்காட்டியுள்ள நிலையில், அதற்கான சகல விதமான முயற்சிகளையும் அரசாங்கம் முன்னெடுப்பதாகவும், சர்வதேச தரப்பின் ஒத்துழைப்புடன் இதனை வெற்றிகொள்ள தேவையான சகல வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

# "அபயம் அறிமுகம்"

மகளிர் மற்றும் சிறார்கள், குறிப்பாக பாடசாலை மாணவர்களிடம் எழும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் பொருட்டாக, தாம் வைத்துள்ள நல்ல திட்டங்கள், அரச இயந்திரத்தை மேலும் வினைத்திறனுடன் செயற்படுத்துவதற்கு ஆலோசனைகளை முன்வைப்பதற்கு இதனூடாக சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது.

உணவு மற்றும் ஊட்டச்சத்து, கல்வி, பாதுகாப்பு, உளவள மற்றும் தொழில் தொடர்பான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான வழிகாட்டுதல்கள், சிறுவர் மற்றும் இளையோருக்கான ஆலோசனைகள் ஆகியன தொடர்பில் குரல்கள் கேட்கப்பட்டுப் பதில் வழங்கப்படும் என அரசாங்கத் தகவல் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தயக்கமோ, பயமோ இன்றி 070 666 6677 என்ற இலக்கத்துக்கு தொடர்பினை ஏற்படுத்தலாம். வளமான சமுதாயத்தைக் கட்டியெழுப்ப வடமாகாண சபை, இத்திட்டத்துக்குத் தோள் கொடுங்கள், போதைப் பொருட்கள், குடும்ப வன்முறைகள் அற்ற நாட்டினைக்கட்டி எழுப்புவோம் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்க துணைத் தூதர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம்



இலங்கைக்கான அமெரிக்க துணைத் தூதர் டக் சோனெக் நேற்று (26) யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டு அரசியல் தரப்புகளை சந்தித்து கலந்துரையாடினார். யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகளை தனித்தனியாக அமெரிக்க துணை தூதர் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன் போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், வட மாகாண சபை அவை தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தரப்புக்கள் தனியாகவும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், சட்டத்தரணி கனகரட்ணம் சுகாஸ், வாசுகி சுதாகர் ஆகியோர் தனியாகவும் சந்தித்து கலந்துரையாடினர்.

# வெடுக்குநாரி, குருந்தூர் மலைக்கு விரைவில் சுமூகமான தீர்வு.

அவற்றுக்கு நியாயமான தீர்வினை வழங்கும் வகையில், ஜனாதிபதி தலைமையில் கூடிய அமைச்சரவை உப குழுவின் கூட்டத்தில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் பல்வேறு விடயங்கள் முன்வைக்கப்பட்டன.

அவற்றுள் தமிழ் மக்களின் வரலாற்று தொன்மைமிகு குருந்தூர்மலை, வெடுக்குநாரி ஆலயம் தொடர்பான விவகாரங்களும் உள்ளடக்கப்பட்டுள்ள நிலையில், ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய குறித்த இரண்டு அமைச்சர்களும் கண்காணிப்பு விஜயத்தினை மேற்கொள்ளவுள்ளனர். ஏற்கனவே, திருக்கோணேஸ்வர ஆலயத்திற்கு அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா மற்றும் விதுர விக்கிரமநாயக்க ஆகியோர் நேரடியாக சென்று, ஆலயத்தின் புனிதத் தன்மைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் வர்த்தக நிலையங்களை அமைப்பதற்கு பொருத்தமான இடத்தினை சம்மந்தப்பட்ட தரப்புக்களின் சம்மதத்துடன் அடையாளப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கஞ்சாவை நம்புகிறேன்

எதிர்பார்ப்பதாககவும் சுதேச மருத்துவ இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி தெரிவித்தார்.

வெளிநாட்டு கையிருப்பு பற்றாக்குறையால் இறக்குமதியில் நெருக்கடி நிலையொன்று காணப்படுகின்றது. மருந்துப்பொருட்களின் இறக்குமதியும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் சுதேச மருத்துவத்துறைக்கு தேவையான ஆயுர்வேத மருத்துவத்துறைக்கு தேவையான மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்வதிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில்

டொலர் நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில் கஞ்சா பயிர்ச்செய்கையை சட்டபூர்வமாக்க வேண்டும் என்ற யோசனை அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டது. இதற்கு இரு வேறுபட்ட நிலைப்பாடுகள் அமைச்சரவையில் நிலவுகின்றன. எவ்வாறு இருப்பினும் இந்த சட்டமூலம் குறித்து உரிய சட்ட ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்பட்டதை தொடர்ந்து இன்னும் ஓரிரு வாரங்களில் அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப் பெறுமென எதிர்பார்க்கிறோம். அவ்வாறு அங்கிகாரம் கிடைத்தாலும் கூட அது மருத்துவ பயன்பாட்டுக்கு மாத்திரமே பயன்படுத்தப்படும் என்றார்.

# டக்ளஸை தாக்கிய இருவருக்கு 22 வருட கடூழிய சிறைதண்டனை

1998ஆம் ஆண்டு களுத்துறை சிறைச்சாலையில் வைத்து டக்ளஸ் எம்.பி மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைகள் இடம்பெற்றுவந்த நிலையில், மேற்குறித்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை, 1998ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் திகதியன்று களுத்துறை சிறைச்சாலையில் வைத்து டக்ளஸ் எம்.பி மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் 6 பேருக்கு கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கப்ராலின் பயணத்தடை நவம்பர் 24வரை நீடிப்பு

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர் என்று குற்றம் சுமத்தி தாக்கல் செய்யப்பட்ட தனிப்பட்ட முறைப்பாடு தொடர்பில், மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலுக்கு விதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டுப் பயணத்தடையை எதிர்வரும் நவம்பர் மாதம் 24ஆம் திகதி வரை நீட்டித்து கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவான் ஹர்ஷன கெகுனாவெல, நேற்று (26) கட்டளை பிறப்பித்தார்.

முன்னாள் ஆளுநருக்கு நோட்டீஸ் பிறப்பிக்கட்டிருந்த நிலையில், கடந்தத அமர்வில் அவர் மன்றில் ஆஜராகாதமையால், ஒக்டோபர் 26ஆம் திகதி (நேற்று) மன்றில் ஆஜராகுமாறு மீண்டும் நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்றையதினம் மன்றில் ஆஜராகியிருந்த முன்னாள் ஆளுநரை 10 மில்லியன் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணையில் விடுவிக்குமாறும் நீதவான் உத்தரவிட்டார். இதேவேளை, தனது சேவை பெறுநருக்கு எதிராக தனிப்பட்ட முறைப்பாட்டைப் பேணுவதற்கு சவால் விடுத்து, கப்ரால் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சம்பத் மெண்டிஸ் ஆட்சேபனைகளை முன்வைத்தார். இரு தரப்பினரும் தங்களது ஆட்சேபனைகளை அடுத்த வழக்குத் திகதியில் தாக்கல் செய்யுமாறு நீதவான் உத்தரவிட்டார்.

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 136(1)(அ) பிரிவின் கீழ், தென் மாகாண முன்னாள் ஆளுநர் ரஜித் கீர்த்தி தென்னகோனினால் தாக்கல் செய்த தனிப்பட்ட முறைப்பாட்டில் 500 மில்லியன் அமெரிக்க டொலர் இறையாண்மை பத்திரத்தை செலுத்த நடவடிக்கை எடுத்ததில் இருந்து நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு கப்ரால் தான் காரணம் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

2005 முதல் 2015 வரை மத்திய வங்கியின் ஆளுநராக அஜித் நிவார்ட் கப்ரால் செயற்பட்ட காலப்பகுதியில் இலங்கை அரசாங்கத்துக்கு, 10.4 முதல் 10.6 பில்லியன் ரூபாய் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக முறைப்பாட்டாளர் குறிப்பிட்டுள்ளார்.

குற்றவியல் நம்பிக்கை மீறலுக்காக தண்டனைச் சட்டத்தின் 388ஆவது பிரிவின் கீழ் கப்ரால் தண்டனைக்குரிய குற்றத்தைச் செய்ததாகவும் பதிவுசெய்யப்பட்ட பங்கு மற்றும் பத்திரங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் குற்றங்களைச் செய்ததற்கு முன்னாள் ஆளுநரும் பொறுப்பு எனவும் முறைப்பாட்டாளர் குற்றம் சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

අමාත්‍ය මණ්ඩල තීරණ
CABINET DECISIONS
அமைச்சரவை முடிவு

# அமைச்சரவை தீர்மானங்கள் சில...

**ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையில் இந்தவாரம் (25) இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களில் சில...**

## 01. இருதரப்பு விமான சேவைகள் ஒப்பந்தம்

இலங்கை மற்றும் நெதர்லாந்து இராச்சியத்திற்கும் இடையில் இராஜதந்திரத் தொடர்புகள் 1951 ஆம் ஆண்டு தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், விமான சேவைகள் ஒப்பந்தத்தை மேற்கொள்வதன் மூலம் இரு நாடுகளுக்கிடையில் நேரடியான பயணிகள் போக்குவரத்து மற்றும் சரக்குகள் விமானப் போக்குவரத்தை ஆரம்பிப்பதற்கு வசதிகள் உருவாகும். அதன் மூலம், இரு நாடுகளுக்கிடையில் சுற்றுலா, கல்வி, வணிகம், முதலீடுகள், விவசாயம் மற்றும் கலாச்சாரத் தொடர்புகள் மேலும் விருத்தியடையும். அதற்கமைய, இரு நாடுகளுக்கிடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளில் உடன்பாடு எட்டடப்பட்டுள்ள விடயங்களுக்கமைய இருதரப்பு விமான சேவைகள் ஒப்பந்தமொன்றில் கையொப்பமிடுவதற்காக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## 02. பணஅனுப்பீடுகளை மேற்கொள்வதற்கு ஊக்குவித்தல்

வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கை புலம்பெயர் தொழிலாளர்களுக்கு சட்டபூர்வமான முறையில் பண அனுப்பல்களை ஊக்குவிக்கும் நோக்கில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சலுகைகளுக்கு 2022.08.08 திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சினால் குறித்த சுற்றறிக்கை ஆலோசனைகள் வெளியிடப்பட்டுள்ளதுடன், தகைமை பெறுகின்ற புலம்பெயர் தொழிலாளர்களுக்கு உயர்ந்தபட்சம் 25,000 அமெரிக்க டொலர்களுக்கு உட்பட்டு இரண்டு சக்கர இலத்திரனியல் வாகனமொன்றும், உயர்ந்தபட்சம் 65,000 அமெரிக்க டொலர்கள் உட்பட்டு நான்கு சக்கர முழு அளவிலான இலத்திரனியல் வாகனமொன்றைக் கொள்வனவு செய்வதற்குத் தேவையான வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரால் அமைச்சரவையின் கவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள, புலம்பெயர் தொழிலாளர்களால் வெளிநாட்டில் வருமானமாக ஈட்டும் வெளிநாட்டு செலாவணியை இலங்கைக்கு அனுப்புவதை மேலும் ஊக்குவிப்பதற்காக கீழ்க்காணும் நடவடிக்கைகளுக்காக அமைச்சரவை உடன்பாடு வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளது :

• 2023.04.30 ஆம் திகதி வரை வாகனமொன்றை இறக்குமதி செய்வதற்காக விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் திகதி வரைக்கும் அனுப்பப்படுகின்ற வெளிநாட்டு செலாவணியின் பெறுமதி 50மூ வீதம் வரை ஊஐகு பெறுமதியுடன் கூடிய இரண்டு சக்கர இலத்திரனியல் வாகனமொன்றை இறக்குமதி செய்வதற்காக அனுமதி வழங்கல்

• 2022.05.01 ஆம் திகதி தொடக்கம் 2023.12.31 ஆம் திகதி வரை எமது நாட்டுக்கு அனுப்பப்பட்ட வெளிநாட்டு செலாவணிப் பெறுமதி 50மூ வீதம் வரைக்கும் ஊஐகு பெறுமதியுடன் கூடிய நான்கு சக்கர முழு அளவிலான இலத்திரனியல் வாகனமொன்றை இறக்குமதி செய்வதற்காக அனுமதி வழங்கல்

03. 1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க கப்பல் போக்குவரத்து முகவர்களுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கல் சட்டத்தை திருத்தம் செய்தல்

## 03. குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை திருத்தம்

உடற்கூற்றுப் பரிசோதனை நடாத்துதல் தொடர்பாக தற்போது காணப்படும் சட்டம், நடவடிக்கைமுறை மற்றும் பிரயோகங்கள் தொடர்பாகப் பொருத்தமான திருத்தங்களை அடையாளங்கண்டு பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக பேராசிரியர் ரவீந்திர பர்னாந்து அவர்களின் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. குறித்த குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகளை உட்சேர்ப்பதற்காக குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையை திருத்தம் செய்ய வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையை திருத்தம் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## 04. மத்தியஸ்தம் தொடர்பான சிங்கப்பூர் சமவாய சட்டமூலம்

மத்தியஸ்தத்தின் மூலம் ஏற்படுகின்ற சர்வதேச இணக்கத்தீர்வு உடன்படிக்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் சமவாயம் எனும் 'மத்தியஸ்தம் தொடர்பான சிங்கப்பூர் சமவாயம்' ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபைக் கூட்டத்தொடரில் 2018.12.20 ஆம் திகதி உறுப்பு நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இலங்கை குறித்த ஒப்பந்தத்தில் 2019.08.07 ஆம் திகதி கையொப்பமிட்டுள்ளதுடன், அதனை இலங்கையில் ஏற்று அங்கீகரித்து நடைமுறைப்படுத்துவதற்காக உள்ளூரில் சட்டம் வகுக்கப்பட வேண்டியுள்ளது.

அதற்கமைய, குறித்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளைக் கருத்தில் கொண்டு, பொருத்தமான சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்காக நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## 05. காலத்தை நீடித்தல்

இக்கருத்திட்டத்திற்காக ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனத்தால் 24,930 மில்லியன் யென் பெற்றுக்கொள்வதற்கான ஒப்பந்தம் 2015.08.11 திகதி கையொப்பமிடப்பட்டுள்ளது. குறித்த கடன்தொகையின் செல்லுபடியாகும் காலம் 2022.10.28 திகதி முடிவடையவுள்ளது. நாட்டில் நிலவுகின்ற சூழ்நிலை காரணமாக கருத்திட்டத்தை திட்டமிட்ட வகையில் நடைமுறைப்படுத்த முடியாமல் போயுள்ளமையால், குறித்த கடன்தொகையின் செல்லுபடியாகும் காலப்பகுதி நீடிக்கப்பட வேண்டியுள்ளது. அதற்கமைய, குறித்த கடன்தொகையின் செல்லுபடியாகும் காலத்தை 2026.04.28 வரைக்கும் நீடிப்புச் செய்வதற்காக மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## 06. கட்டணத்தை திருத்தம் செய்தல்

கூரை மீது நிர்மாணிக்கப்படும் சூரியமின்கல மின்னுற்பத்தி முறை மூலம் தற்போது கிட்டத்தட்ட 580 மெகாவோட் மின்சாரம் தேசிய மின்வலுக் கட்டமைப்புக்கு இணைக்கப்பட்டுள்ளதுடன், மின்சார சபையால் தயாரிக்கப்பட்டுள்ள நீண்டகால மின்னுற்பத்தி விரிவாக்க திட்டத்திற்கமைய, மேலும் 1800 மெகாவோட் வலுக்கொண்ட மின்சாரத்தை இதன்மூலம் விநியோகிக்க வேண்டிய தேவை கண்டறிப்பட்டுள்ளது.

அதற்கான ஊக்குவிப்பாக தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ள சூரியமின்கல மின்னுற்பத்தி நிலையங்களிலிருந்து கொள்வனவு செய்யும் மின்சாரக் கட்டணத்தைத் திருத்தம் செய்வதற்கான பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. குறித்த குழுவின் பரிந்துரையின் பிரகாரம் கட்டணத் திருத்தம் செய்வதற்காக மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

---

நாடு உணவில் தன்னிறைவை அடைய

# அனைத்து மதத்தலங்களும் ஒன்றிணைதல் அவசியம்

எமது நாடு உணவில் தன்னிறைவை அடைவதற்காக அரசு முன்னெடுக்கும் தேசிய வேலைத்திட்டத்திற்கு கிராமத்திலுள்ள விகாரைகள் உள்ளிட்ட அனைத்து மதத்தலங்களும் ஒன்றிணைதல் மிக முக்கியமாகும் என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

நேற்று (26) மாதிவெல, கேதுமதீ விகாரை மற்றும் பொல்வத்த ஸ்ரீ சத்தர்மாராம விகாரையில் இடம்பெற்ற கிராமிய பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் உணவுப் பாதுகாப்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.



கிராமத்திலுள்ள விகாரைகள் உள்ளிட்ட அனைத்து மதத்தலங்களும் பங்கேற்கின்ற உணவுப் பாதுகாப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டமானது, ஜனாதிபதியின் தலைமையில் தற்போது மிகவும் வெற்றிகரமாக நடந்து கொண்டிருக்கிறது. இதற்காக ஒவ்வொரு கிராமங்களுக்கும் அரச உத்தயோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன், மக்கள் பிரதிநிதிகளைக்கொண்ட குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. உணவுக்காக மட்டுமல்லாமல் ஏற்றுமதியில் சேர்க்கப்படக்கூடிய உணவுகள் தொடர்பிலும் ஒவ்வொரு மாவட்டமும் கவனம் செலுத்துதல் வேண்டும். உதாரணமாக, புத்தளம் மாவட்டம் தற்போது பருத்தி உற்பத்தியில் ஈடுபட்டுள்ளதுடன், அடுத்த எட்டு மாதங்களில் பருத்தி அறுவடை செய்யப்பட்டு, ஏற்றுமதி செய்யப்பட எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த திட்டமானது ஏனைய மாவட்டங்களுக்கு ஒரு முன்னுதாரணமாகத் திகழ்வதுடன் முன்னைய உற்பத்தியை விட அதிகளவான விளைச்சலைப் பெறத்தக்க பயிர்ச்செய்கை போன்று, ஏற்றுமதிப் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் பயிர்ச்செய்கை தொடர்பிலும், நாம் கவனம் செலுத்துதல் வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

---



வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு

## இரண்டு வாரங்களுக்குள் விசேட வேலைத்திட்டம்

தொழிற் பயிற்சி நிறுவனங்களுடன் இணைந்து பயிற்றப்பட்ட தொழிலாளர்களை அதிகளவில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு அனுப்ப வினைத்திறன் மிக்க வேலைத்திட்டமொன்றை இரண்டு வாரங்களுக்குள் தயாரிக்குமாறு அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு (கோபா குழு) வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துக்கு அறிவுறுத்தியது. வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையின் தர மேம்பாட்டிற்காக ஆற்றவேண்டிய பணிகள் குறித்த செயலாற்றுகைக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையை ஆராயும் நோக்கில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாஷீம் தலைமையில் கூடியபோதே இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களில் பயிற்றப்பட்ட பணியாளர்களுக்கான தேவை அதிகம் காணப்படுவதுடன், கேள்விக்கு ஏற்ற வகையில் பயிற்சி பெற்ற பணியாளர்களை இந்நாட்டிலிருந்து அனுப்ப முடியாமல் உள்ளமை பாரிய பிரச்சினை என்றும், 2021ஆம் ஆண்டு இந்த எண்ணிக்கை 33 விகிதத்தை விடவும் குறைவாகக் காணப்பட்டதாகவும் குழுவின் தலைவர் இங்கு சுட்டிக்காட்டினார். பொறுப்புக் கூறவேண்டிய நிறுவனங்கள் உரிய ஒருங்கிணைப்புடன் சரியான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தாமையே இந்த நிலைமைக்குக் காரணம் என்றும் தெரிவித்தார்.

எனவே, வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் என்பன இந்நாட்டிலுள்ள தொழில் பயிற்சி நிறுவனங்களுடன் இணைந்து உலகின் புதிய தொழிற்சந்தை குறித்து உரிய கவனம் செலுத்தி அங்குள்ள கேள்விக்கு ஏற்ற வகையில் சம்பந்தப்பட்ட துறைகளில் பணியாளர்களைப் பயிற்றுவிக்க புதிய வேலைத்திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டியதன் அவசியமும் இங்கு வலியுறுத்தப்பட்டது.

---

சுகாதார ரீதியாக

## தகுதியற்ற பொலிஸ் அதிகாரிகளின் சேவையை நிறைவுசெய்ய ஆராய்வு

■ சேவையை நிறைவுசெய்ய ஆராய்வு

சுகாதார ரீதியாக தகுதியற்ற பொலிஸ் அதிகாரிகளின் சேவையை நிறைவுசெய்வது தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் கவனம் செலுத்தப்பட்டது. பொதுமக்கள் பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் முதலாவது கூட்டம் அதன் தலைவர் அமைச்சர் டிரான் அலஸ் தலைமையில் பாராளுமன்றத்தில் கூடிய போதே இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

உரிய சுகாதார ஆரோக்கிய நிலையில் இல்லாத பலர் பொலிஸ் சேவையில் உள்ளதாகவும் அவர்கள் வைத்திய சான்றிதழ்களை காண்பித்து சிரமமான கடமைகளில் ஈடுபடுவதில்லை என வருகைதந்த உறுப்பினர்கள் இங்கு தெரிவித்தனர். எனினும், ஒரு சிலருக்கு அவ்வாறான சுகாதார கோளாறுகள் இல்லை என்றும், இதனால் எப்பொழுதும் கடமைகளை சரியாக மேற்கொள்ளும் அதிகாரிகள் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

அதற்கமைய, சுகாதார ரீதியாக தகுதியற்ற சுமார் 4000 பொலிஸ் அதிகாரிகள் தற்பொழுது பொலிஸ் சேவையில் உள்ளதாக பொலிஸ்மா அதிபர் சுட்டிக்காட்டினார். இதன்போது ஆலோசனை



வழங்கிய அமைச்சர் டிரான் அலஸ் குறிப்பிடுகையில், சுகாதார ரீதியாக தகுதியற்ற பொலிஸ் அதிகாரிகளை சேவையிலிருந்து நீக்குவது தொடர்பான பிரேரணையை பொலிஸ் திணைக்களத்தினால் தயாரித்து அமைச்சுக்கு சமர்ப்பிக்குமாறு தெரிவித்தார். அதற்கமைய எதிர்வரும் காலத்தில் அதனை செயற்படுத்த நடவடிக்கை எடுப்பதாக அவர் குறிப்பிட்டார்.

அதேபோன்று, இந்த ஆண்டில் பாரிய அளவிலான பொலிஸ் அதிகாரிகள் ஓய்வு பெறுவதால் 16,000 பொலிஸ் அதிகாரிகளுக்கான வெற்றிடம் ஏற்படுவதாகப் பொலிஸ்மா அதிபர் சுட்டிக்காட்டினார். மேலும், பொலிஸ் அதிகாரிகள் போதைப்பொருள் பயன்படுத்துவது தொடர்பில் அறிக்கையிடப்பட்டுள்ள சம்பவங்கள் தொடர்பிலும் இதன்போது கலந்துரை யாடப்பட்டது. அதேபோன்று இணையத்தை பயன்படுத்தி தனிநபர்களின் சுயமரியாதைக்கு பாதிப்பு ஏற்படுத்துவது தொடர்பில் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது பற்றியும் குழுவில் கவனம் செலுத்தப்பட்டது.


---

ஜனநாயகத்தை உறுதிப்படுத்தி

## தீர்வுகளை நோக்கி பயணிக்க வேண்டும்

அமெரிக்க திறைசேரியின் ஆசியாவுக்கான பிரதி உதவி செயலாளர் ரொபர்ட் கப்ரோத், பிரதான எதிர்க்கட்சி உறுப்பினர்களை சந்தித்து கலந்துரையாடியிருந்தார். நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமைகள், மனித உரிமை மீறல்கள், அடக்குமுறைகள் என பல்வேறு காரணிகள் இதன்போது எதிர்க்கட்சியினால் எடுத்துக்கூறப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் முன்னெடுக்கும் பேச்சுவார்த்தைகளின் வெளிப்படைத்தன்மை குறித்து முழுமையாக அறிந்துகொள்ள முடியவில்லை எனவும், பாராளுமன்றத்தில் இது குறித்து எந்தவித அறிவித்தல்களும் கிடைக்கவில்லை எனவும் தெரிவித்துள்ள எதிர்க்கட்சி உறுப்பினர்கள், இப்போதும் இலங்கையின் பொருளாதார நெருக்கடியானது இதுவரை காலமாக இருந்த வறுமை நிலைமையை விஞ்சிய அளவிற்கு வேகமாக மோசமடைந்துள்ளது என்பதை கருத்தில் கொள்ள வேண்டும் எனவும், இந்த ஆண்டு நடுப்பகுதி வரையில்



முன்னெடுக்கப்பட்ட கணக்கெடுப்பில் 9.6 மில்லியன் மக்கள் வறுமைக்கோட்டின் கீழ் வசிக்கும் நிலை உருவாகியுள்ளமை சாதாரண விடயம் அல்ல எனவும் தெரிவித்துள்ளனர்.

மேலும், மக்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களின் உரிமைக்கான போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்ற நிலையில் அதனை கட்டுப்படுத்தும் விதமாக அரசாங்கத்தின் அடக்குமுறை செயற்பாடுகள் அமைந்துள்ளதாக தெரிவித்துள்ள எதிர்க்கட்சியினர், இது மேலும் மேலும் இலங்கையை நெருக்கடிக்குள் தள்ளும் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளனர். இது குறித்து கருத்துக்களை பகிர்ந்துகொண்டுள்ள அமெரிக்க திறைசேரியின் ஆசியாவுக்கான பிரதி உதவி செயலாளர் ரொபர்ட் கப்ரோத், குரல் எழுப்பும் பன்முகத்தன்மை அனைத்து குடிமக்களுக்கும் சமமானதாக அமைய வேண்டும். ஜனநாயகம் என்ற உயரிய பண்பில் இருந்தே தீர்வுகளை நோக்கி பயணிக்க வேண்டும். அதனை நாம் தொடர்ச்சியாக வலியுறுத்துவோம் எனத்தெரிவித்துள்ளதுடன், நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள இலங்கைக்கு ஒத்துழைப்புகளை வழங்க தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.


## வீடு வாடகைக்கு

கல்கிஸை காலி வீதிக்கு மிக அருகில் தரைத்தள வீடு வாடகைக்கு உள்ளது. பெரிய வரவேற்பு அறை, 03 படுக்கை அறைகள், 02 குளியல் அறைகள், களஞ்சிய அறை, டைல்ஸ் பதிக்கப்பட்ட தரை மற்றும் வாகனம் நிறுத்தக்கூடிய வசதி. 0714 187080

கல்முனையில் 397 ஆசிரியர்கள் மேலதிகம்:

# கிழக்கில் 397 கணித பாட ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை

## கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் தகவல்

■ காரைதீவு நிருபர் சகா

கிழக்கு மாகாணத்தில், 397 கணித பாட ஆசிரியர்களுக்கு தட்டுப்பாடு நிலவும் அதேவேளை, மேலதிகமாக 397 ஆசிரியர்கள் கல்முனை வலயத்தில் இருப்பதாக கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் தெரிவித்தார்.

றாணமடு இந்து மகா வித்தியாலய ஆசிரியர் தின விழா, நேற்று முன்தினம் (25) அதிபர் கே. கதிரைநாதன் தலைமையில் நடைபெற்றபோது, பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்குறிப்பிட்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

பொதுவாக கிழக்கு மாகாணத்தில் 397 கணித பாட ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவுகிறது . விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர்களுக்கு வலயம் சார்ந்த பற்றாக்குறை நிலவுகின்றது.

தொழில் உலகத்தை நோக்கிய பயணம் எம்மிடையே குறைவு. இன்று உலகில் தொழில்நுட்ப ரீதியான மாற்றங்கள் படுவேகமாக நடந்து வருகின்றன. எனவே, எதிர்காலத்தில் உயர்தரத்தில் கணித, விஞ்ஞான பாடங்களில் மாணவர்கள் கற்பதற்கு ஊக்குவிக்க வேண்டும்.

அதிர்ஷ்டவசமாக சம்மாந்துறை வலயத்தில் ஆசிரியர்கள் பற்றாக்குறை இல்லை. ஆனால், அருகில் இருக்கக்கூடிய கல்முனை வலயத்தில், கிழக்கு மாகாணத்தில் அதிககூடிய மிகையாக 397 ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். உலக வங்கி மற்றும் ஏனைய திட்டங்கள், கணக்காய்வு நிறுவனத்தின் அறிக்கைகளின் படி, கல்முனை வலயத்திலே ஏகப்பட்ட பிரச்சினைகள், கேள்விகள் வருகின்றன. இதனை சீர்செய்யுமாறு, கிழக்கு மாகாண ஆளுநர், செயலாளருடாக எனக்குப் பணிப்புரை வழங்கி இருக்கின்றார் என்றார்.

'வாழ்நாள் சாதனையாளர்' விருது பெற்ற மாகாண கல்வி பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம், பாடசாலையாலும் வலயத்தாலும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.






முதியோருக்கான கொடுப்பனவுகள்

## வீடுகளுக்கே கொண்டுசென்று கொடுக்கப்படும்

■ எம்.எல்.எஸ் டீன்

அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட மக்களுக்கான நலனுதவிகளை, சமுர்த்தி வங்கிகளூடாக வழங்கி வைக்கும் திட்டத்தில் முதற்கட்டமாக முதியோருக்கான கொடுப்பனவு வழங்கும் நிகழ்வின் அங்குரார்ப்பணம், அக்கரைப்பற்று மேற்கு சமுர்த்தி வங்கியில் வங்கி முகாமையாளர் யூ.கே.எம் நழீம் தலைமையில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம் அன்சார் கலந்து கொண்டு சமுர்த்திப் பயனாளிகளுக்கு வழங்கிவைத்தார். இதன்போது தலைமை பீட முகாமையாளர் எம்.பி.எம் ஹுசைன், வங்கிச்சங்க முகாமையாளர் எம்.ஜே.எம் நிஃமதுல்லாஹ், கருத்திட்ட முகாமையாளர் என்.ரி மசூர் மற்றும் வங்கி சமுர்த்தி வலய அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் பயன்பெறும் முதியோர்களும் கலந்து கொண்டனர்.

ஏற்கெனவே, தபால் அலுவலகங்களில் வழங்கப்பட்ட முதியோருக்கான கொடுப்பனவுகள், முதியோர்களின் நன்மை கருதி, பிரதேசத்துக்குப் பொறுப்பான சமுர்த்தி உத்தியோகத்தர்களின் மூலம், அவர்களின் வீடுகளுக்கே கொண்டு சென்று வழங்கிவைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திருகோணமலை – அநுராதபுரம் வீதியில் விபத்து

### திருகோணமலைக்கு மின்சாரம் துண்டிப்பு

■ எப். முபாரக்

திருகோணமலை - அநுராதபுரம் வீதியில், துவரங்காடு சந்தியில் நேற்று (26) நிகழ்ந்த வாகன விபத்தில் இருவர் பலத்த காயங்களுடன் திருகோணமலை பொதுவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சிமெந்து ஏற்றி வந்த பாரிய கொள்கலன், வீதியில் நின்றிருந்த மாடுகளுடன் மோதுவதைத் தவிர்க்கும்பொருட்டு, திருப்பிய வேளையில், வீதியை விட்டு விலகி, அங்கிருந்த அதி உயர் மின்னழுத்த மின்கம்பத்துடன் மோதியது.

குறித்த விபத்தின் காரணமாக, மின்கம்பம் சேதமடைந்ததால் திருகோணமலையின் பரவலான பகுதிகளுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை உப்புவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## காதி நீதவான் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

■ எம்.எஸ்.எம் ஹனீபா

அம்பாறை மாவட்டத்திலுள்ள பிரதேசங்களில் நிலவும் குவாசி நீதவான் (காதி) பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு, நீதிச் சேவை ஆணைக்குழுவால் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளதாக, நீதிச் சேவை ஆணைக்குழுவின் சிரேஷ்ட உதவி செயலாளர் ஆனந்தி கனகரத்தினம் அறிவித்துள்ளார்.

அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுகள், கரைவாகுப்பற்று வடக்கு, வர்ப்பத்தான்சேனை, அமீரலிபுரம், நல்லதண்ணி மலை, இறக்காமம் கிராம அலுவலகர் பிரிவு 01 முதல் 09 வரை, கரைவாகுப்பற்று தெற்கு, மல்கம்பிட்டி, நெய்னாகாடு, நாவிதன்வெளி ஆகிய பிரதேசங்களுக்கு குவாசி நீதவான் (காதி) பதவிக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரர் ஆணாக இருத்தல் வேண்டும். அத்துடன் அங்கிகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டதாரியாகவோ அல்லது அல் ஆலிம் பரீட்சையில் சித்தியடைந்தவராயிருத்தல், அங்கிகரிக்கப்பட்ட சான்றிதழ் பெற்ற மௌலவி அல்லது சட்டத்தரணியாகவும் 40 வயதுக்கு மேற்பட்டவராகவும், இருத்தல் வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை நவம்பர் மாதம் நான்காம் திகதிக்கு முன்னர் சிரேஷ்ட உதவி செயலாளர், நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம், த.பெ. இல 573, கொழும்பு-12 எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

## இலிங்கநகர் கோணலிங்க மகாவித்தியாலய விவாத அணி முதலாம் இடம்



■ அ. அச்சுதன்

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு திருகோணமலை, உப்புவெளி பிரதேச சபை பொது நூலகத்தால் நடத்தப்பட்ட உப்புவெளி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான விவாதச் சுற்று போட்டியில் இலிங்கநகர் ஸ்ரீ கோணலிங்க மகா வித்தியாலய விவாத அணியினர் வெற்றிபெற்றுள்ளனர்.

ஆறு பாடசாலைகளின் அணிகள் பங்குபற்றிய போட்டியில், இலிங்கநகர் ஸ்ரீ கோணலிங்க மகா வித்தியாலயம் முதலாம் இடத்தையும், வெள்ளைமணல் அல் அக்ஸார் பாடசாலை இரண்டாம் இடத்தையும், சாம்பல்தீவு சல்லியம்பாள் வித்தியாலய அணி மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில்

# அதிக சிறார்கள் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிப்பு

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவிலேயே ஐந்து வயதுக்கு உட்பட்ட அதிகளவான சிறார்கள், ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

பொருட்களின் விலையற்றம், தொழில் இழப்பு என்பவற்றால் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான குடும்பங்களைச் சேர்ந்த சிறார்களும் முதியவர்களும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும், ஐந்து வயதுக்கு உட்பட்ட 576 வரையான சிறார்கள், ஊட்டச்சத்து குறைபாடுகளுடன் காணப்படுவதாக, பிரதேச செயலகங்களில் இருந்து பெறப்பட்ட தகவல்களில் கண்டறியப்பட்டுள்ளது.

அதாவது, கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் 48 சிறுவர்களும் கண்டாவளை பிரதேச செயலாளார் பிரிவில் 128 சிறுவர்களும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் 108 சிறுவர்களும் பூநகரி பிரதேச செயலர் பிரிவில் 292 சிறுவர்கள் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டு இருப்பதாகவும் புநகரி பிரதேசத்திலேயே அதிகளவான சிறார்கள் பாதிக்கப்பட்டுள்ளமையும் தெரியவந்துள்ளது.

அத்துடன் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் 581 கர்ப்பிணித் தாய்மார்களும் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் 48 கர்ப்பிணித் தாய்மார்களும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் 62 கர்ப்பிணித் தாய்மார்களும் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் 93 கர்ப்பிணித் தாய்மார்களுமாக சுமார் 784 கர்ப்பிணித் தாய்மார்கள் வறுமையால் பாதிக்கப்பட்டு உள்ளதாகவும் ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

அதாவது, வறுமைக்கோட்டின் கீழ் நாளாந்த தினக்கூலி வேலை செய்து வாழும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களே பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாக கண்டறியப்பட்டிருக்கின்றது.



## யாழில் சூரிய கிரகணம்

■ எம். றொசாந்த்

யாழ்ப்பாணத்தில் சூரிய கிரகணம், நேற்று முன்தினம் (25) மாலை 5.27 மணி முதல் மாலை 6.30 மணி வரையில் தென்படும் என்று கூறப்பட்ட போதிலும், யாழில் கடந்த சில தினங்களாக மழை பெய்து வருவதால், பெரும்பாலான பகுதிகளில் மழை முகில்கள் காணப்பட்டப்பட்டமையால், அநேக இடங்களில் சூரிய கிரகணத்தை பார்வையிட முடியாத நிலைமை காணப்பட்டது. இருந்த போதிலும், ஆங்காங்கே சில இடங்களில், சூரிய கிரகணத்தை சிறிது நேரம் பார்வையிட முடிந்தது. செய்தியுடன் இணைக்கப்பட்ட படம், அச்சுவேலி, அக்கரை கடற்கரை பகுதியில் பிடிக்கப்பட்டதாகும்.

## இறைச்சிக்காக மாடு திருடியவர்கள் தலைமறைவு

■ செந்தூரன் பிரதீபன்

வேலணை, திருவள்ளுவர் வீதியில் உள்ள வீடு ஒன்றில், திருடிய மாட்டை இறைச்சியாக்குவதற்காக, வீட்டின் பின்புறத்தில் கட்டி வைத்திருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் (25) பகல் நேர ரோந்து கடமையில் ஈடுபட்டிருந்த ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு, திருடப்பட்ட மாடு குறித்து பிரதேச மக்கள் தகவல் தெரிவித்தனர். இதன் அடிப்படையில், மாட்டை பொலிஸார் மீட்டுள்ளனர்.

சந்தை நபர்கள், தலைமறைவாகியுள்ள நிலையில், அவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## வடக்கில் நடமாடும் சேவை

■ கெ. கீதாஞ்சன்

முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சுகளின் நடமாடும் சேவை ஒக்டோபர் 31ஆம் திகதியும் நவம்பர் முதலாம் திகதிம் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடமாடும் சேவையானது, 31 ஆம் திகதி யாழ். மாவட்ட செயலக வளாகத்திலும், நவம்பர் முதலாம் திகதி கிளிநெச்சி மாவட்ட திறன் விருத்தி மத்திய நிலைய வளாகத்திலும் நடைபெறவுள்ளது.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் தூதரகப்பிரிவு, பாதுகாப்பு அமைச்சு, நகரஅபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் மீள்குடியேற்ற பிரிவு, ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம், குடிவரவு, குடியகல்வு திணைக்களம், காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம், மாகாண காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம், இழப்பீட்டுக்கான அலுவலகம், காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம், இந்தியாவில் இருந்து நாடுதிரும்பியோருக்கான சேவைகள் என்பன இதன்போது வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கபபட்டுள்ளது.

முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களை சேர்ந்த பொதுமக்கள. இந்த இரண்டு இடங்களிலும் வசதியான இத்திற்கு சமூகமளித்து, சேவைகளை பெற்றுக்கொள்ள முடியம்,

## பளையில் இளைஞன் மீது கத்தி வெட்டு

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முல்லையடி பகுதியில் நேற்று முன்தினம் (25) மாலை வேளை, வீட்டுக்கு சென்று கொண்டிருந்த இளைஞன் மீது, இனந்தெரியாத நபர் ஒருவர் கத்தியால் வெட்டி தாக்குதல் நடத்தியுள்ளார்.

காயத்துக்குள்ளான முல்லையடியைச் சேர்ந்த பால்ராஜ் துஷாந்தன் என்ற இளைஞன், பளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

நேற்று (26) முல்லையடி இளைஞன் மீது தாக்குதல் மேற்கொண்டதாக, பளையச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் பளை பொலிஸ் நிலையத்தில் சரண்டைந்துள்ளதாகவும் தனிப்பட்ட தகராரே இச்சம்பவத்துக்கு காரணம் எனவும் பளை பொலிஸார் தெரிவித்தனர்.

# யாழில் பாவனைக்கு உதவாத புளி மீட்பு

■ எம். றொசாந்த்

யாழ்ப்பாணம் நகரை அண்டிய பகுதியில், மனித பாவனைக்கு உதவாத ஆறாயிரம் கிலோ கிராம் பழப்புளி, பொதுச் சுகாதார பரிசோதகரால் முற்றுகையிடப்பட்டு மீட்கப்பட்டுள்ளது.

யாழ். நகரை அண்டிய பகுதியில் உள்ள களஞ்சியசாலையில், பாவனைக்கு உதவாத பழப்புளி, சுகாதாரமற்ற முறையில் பொதியிடப்படுவதாக யாழ். மாநகர பொதுச் சுகாதார பரிசோதகருக்கு இரகசிய தகவல் கிடைக்கப்பெற்றது.

அதனை அடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த பொதுச் சுகாதார பரிசோதகர் , பழப்புளியை மீட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் உரிமையாளருக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தொடர்வதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளார்.



# அம்பலமானது

டி.ஷங்கீதன்

அதிபர்கள், ஆசிரியர்களுக்கு கிடைக்க வேண்டிய கொடுப்பனவுகளை கல்வி அதிகாரிகள் காவலாளிகளுக்கும் சிற்றூழியர்களுக்கும் வழங்கியுள்ளமை மத்திய மாகாண கணக்காய்வு திணைக்களத்தின் மூலமாக மேற்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இருப்பினும், இக்கொடுப்பனவுகளை வழங்கிய விடயத்துடன் தொடர்புடைய அதிகாரிகள் மீது எந்தவிதமான நடவடிக்கைகளும் இதுவரையில் மேற்கொள்ளப்படாது, கணக்காய்வு அறிக்கைக்கு மேலதிகமாக விசாரணைக்குழுவே நியமிக்கப்பட்டு காலதாமதம் செய்யும் செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றது.

அதேநேரம் குறித்த கொடுப்பனவைப் பெற்றுக்கொண்ட சிற்றூழியர்களும் காவலாளிகளும், “நாங்கள் தவறு செய்யவில்லை. எங்களுக்கு வழங்கப்பட்ட சம்பளத்தையே நாங்கள் பெற்றுக் கொண்டுள்ளோம்” என்று தெரிவிக்கின்றார்கள்.

“செலுத்தப்பட்ட தொகையை மீள அறவிட நடவடிக்கை எடுக்க முடியும். அதனை தவிர தற்பொழுது வேறெந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது. எங்களுடைய உள்ளக ஆய்வுகள் நிறைவடைந்த பின்னரே மேலதிக நடவடிக்கை மேற்கொள்ள முடியும்” என்று மத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் அமரசிறி பியதாஸ குறிப்பிடுகின்றார்.

அதேநேரம், கணக்காய்வறிக்கையில் முறையற்ற கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளமை தெளிவாக உறுதிப்படுத்தப்பட்ட போதும், அதனடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

“உள்ளக விசாரணைகளின் பின்பே யார் தவறு செய்திருக்கின்றார்கள் என்பதும் அதற்கான சட்ட ஏற்பாடுகள் தொடர்பாகவும் நடவடிக்கை எடுக்க முடியும். மீளஅறவிடுவது மாத்திரமன்றி சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் முடியும்” என்று அமரசிறி பியதாஸ குறிப்பிடுகின்றார்.

“தவறுகளை செய்கின்ற அதிகாரிகளுக்கு எதிராக, கடுமையான சட்ட நடவடிக்கைளை மேற்கொள்ளாவிட்டால், எதிர்வரும் காலங்களில் இவ்வாறான தவறுகளை நிறுத்த முடியாது. கல்வி ரீதியான சட்டங்கள் மாற்றி அமைக்கப்பட வேண்டியது காலத்தின் கட்டாமாகும்” என சட்டத்தரணி பரமேஸ்வரன் குறிப்பிடுகின்றார்.

கல்வி அதிகாரிகளின் அசமந்த போக்கா?அல்லது திட்டமிட்ட செயலா?அல்லது கவனயீனமா? அல்லது அதிகாரிகளின் பொறுப்பற்ற செயலா?

சுற்று நிரூபத்தை மீறி, தெல்தெனிய கல்வி வலயத்தில் 44 பேருக்கு 65,72,677 ரூபாய், கஸ்டப் பிரதேச கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளமை தொடர்பில் கணக்காய்வின் மூலம் வெளிவந்துள்ளது.

கஸ்டப் பிரதேச அதிகஸ்டப்பிரதேச கொடுப்பனவுகள் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு மாத்திரம் வழங்கப்பட வேண்டும் என்ற சுற்று நிருபத்தின் மூலமாக தெளிவாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அதையும் மீறி மத்திய மாகாண தெல்தெனிய கல்வி வலயத்தில் காவலாளிகளுக்கும் சிற்றூழியர்களுக்கும் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் செயலாளர் கஸ்ட, அதிகஸ்ட பிரதேசங்களுக்கான கொடுப்பனவு தொடர்பிலான சுற்று நிருபத்தையும் மீறி, 2005 முதல் 2022 வரை 17 வருடங்களாக இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளமை கணக்காய்வின் மூலமாக தெரியவந்துள்ளது.

இந்தச் சுற்றுநிருபத்தின் அடிப்படையில் மத்திய மாகாணத்தில் அதி கஸ்ட பிரதேச பாடசாலைகள் 7 சதவீதமும் கஸ்ட பாடசாலைகள் 17 சதவீதம் எனவும் இனம் காணப்பட்டு, அதனை மத்திய மாகாண ஆளுநர் அனுமதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தக் கொடுப்பனவானது 2019ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்துக்குப் பின்பு ஓய்வுபெற்ற காவலாளிகள் மற்றும் சிற்றூழியர்களுக்கும் தற்பொழுது கடமையில் இருக்கின்றவர்களுக்குமே வழங்கப்பட்டுள்ளது. 2005 ஆம் ஆண்டு முதல் 2019 ஆண் ஆண்டுவரை குறித்த பாடசாலைகளில் சேவையில் இருந்து ஓய்வு பெற்றவர்களுக்கும் இந்தக் கொடுப்பனவை வழங்கியுள்ளமை தொடர்பாக உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் ஆவணங்களை வழங்குவதற்கும் தெல்தெனிய வலய கல்வி பணிமனையின் அதிகாரிகள் மறுத்துள்ளமை தொடர்பாகவும் குறித்த கணக்காய்வு அறிக்கையில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கஸ்ட பிரதேச அதி கஸ்ட பிரதேச பாடசாலைகளின் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கும் அவ்வாறு இனம் காணப்பட்ட பாடசாலைகளில் கடமைகளை மேற்கொள்கின்ற ஆசிரியர்களை ஊக்குவிக்கும் முகமாகவே, கல்வி அமைச்சின் செயலாளரால் இந்தக் கொடுப்பனவு முறையானது அறிமுகப்படுத்தப்பட்டள்ளது.

இதன் அடிப்படையில் கஸ்ட பிரதேச அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் 1,500 ரூபாயும் அதி கஸ்ட பிரதேச அதிபர்கள், ஆசிரியர்களுக்கு 2,500 ரூபாயும் வீதமும் வழங்கப்படுகின்றது.

கொடுப்பனவுகளை தங்களுக்கு பெற்றுத் தருமாறு எந்த ஒரு கோரிக்கையும் காவலாளிகளாலும் சிற்றூழியர்களாலும் முன்வைக்கப்படவில்லை எனவும் அது தொடர்பான எந்தவிதமான எழுத்து மூலமான ஆவணங்கள் கணக்காய்வின் பொழுது தங்களுக்கு காண்பிக்கப்படவில்லை எனவும் கணக்காய்வை மேற்கோண்ட குழுவின் பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பான கணக்காய்வு அறிக்கை கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அதன் பிரதிகள் மத்திய மாகாண பிரதான செயலாளர், மத்திய மாகாண கல்வி பணிப்பாளர் மற்றும் தெல்தெனிய கல்வி வலயத்தின் வலயக் கல்வி பணிப்பாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அந்த பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரி தெரிவிக்கின்றார்.

தனக்கு கணக்காய்வின் அறிக்கை கிடைக்கப்பெற்றிருப்பதாகவும் அதன் அடிப்படையில் தற்பொழுது விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் விசாரணையின் பின்பு தான் உரிய நடவடிக்கை எடுக்க தீர்மானித்திருப்பதாகவும் மத்திய மாகாண பிரதான செயலாளர் காமிய ராஜராத்ன குறிப்பிடுகின்றார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இதுவரையில் நாங்கள் எந்த ஒரு நபரையும் தண்டிக்கவோ அவர்களை வேலையில் இருந்து இடைநிறுத்தவோ நடவடிக்கை எடுக்கவில்லை. காரணம், எங்களுக்கு கணக்காய்வை வைத்துக் கொண்டு அந்தத் தீர்மானத்தை எடுக்க முடியாது. எனவே நாங்கள் தற்பொழுது மாகாண கல்வி அமைச்சின் ஊடாக அதாவது மாகாண பிரதான செயலாளர் முன்னெடுக்கின்ற விசாரணை அறிக்கை கிடைத்த பின்பே இது தொடர்பான மேலதிக நடவடிக்கையை எடுக்க முடியும்.

இந்த விசாரணையின் பொழுது தவறான முறையில், அதாவது சுற்றுநிரூபத்திற்கு வெளியில் சென்று யாரேனும் ஒருவர் கொடுப்பனவை பெற்றுக் கொண்டிருக்கின்றமை நிரூபிக்கப்பட்டால் அவர்களிடம் இருந்து அந்தத் தொகையை மீள அறவிடுவதற்கான சட்ட எற்பாடுகள் இருக்கின்றன.அதற்கு அமைய நாம் செயற்பட்டு அந்தத் தொகையை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என மத்திய மாகாண கல்வி பணிப்பாளர் அமரசிரி பியதாஸ குறிப்பிடுகின்றார்.

# பாராமுகம் ஏன்?

ரா.கமல்

கேகாலை மாவட்டம், தெஹியோவிட்ட கல்வி வலயத்திற்கு உட்பட்ட தெஹியோவிட்ட தமிழ் மகா வித்தியாலயம் 2016ஆம் ஆண்டு மண்சரிவால் பாதிக்கப்பட்டு கல்வி செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்திருந்தன.







இந்நிலையில், தெஹியோவிட்ட தேசிய பாடசாலையில் பெரும்பான்மை மாணவர்களின் கல்வி செயற்பாடுகள் நிறைவு பெற்றதும் 1.30 மணிக்கு பிறகு தமிழ் மாணவர்களுக்காக மாலைநேர பாடசாலை இடம்பெற்றது. இது தற்காலிக தீர்வாகும்.

பின்பு, வானிலை சுமூகமான நிலையில், மீண்டும் அந்த மண் சரிவு அபாயமிக்க தெஹியோவிட்ட பாடசாலைக்கே மாணவர்கள் திருப்பி அனுபப்பட்டனர்.

பாடசாலையில் கல்வி செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாத நிலையில், தெஹியோவிட்ட நகரில் இருந்து 2 கிலோ மீற்றர் தொலைவில் ஈரியகொல்ல பகுதியில் பாடசாலைக்கான புதிய காணி அரசியல் அழுத்தத்தின் மூலம் பெறப்பட்டு, மூன்று மாடிக்கட்டடம் அமைக்கப்பட்டு வந்தது. இருந்தபோதிலும் குறித்த கட்டடம் இன்னும் நிறைசெய்யப்படாமல் கைவிடப்பட்ட நிலை காணப்படுகின்றது.

2016க்கு பிறகு ஒவ்வொரு வருடமும் மழைக்காலத்தில் மாணவர்கள் மிகவும் அச்சத்திலேயே கல்வி கற்று வந்தனர். எந்நேரத்திலும் பாடசாலை முழுமையாக மண்சரிவுக்கு உட்படலாம் என்ற நிலை தொடர்ந்து காணப்படுகின்றது.

இந்நிலையில், இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு கோரி, பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் இணைந்து தெஹியோவிட்ட நகரில் கவனயீர்ப்பு போராட்டத்தில் நேற்று (26) ஈடுப்பட்டனர்.

தெஹியோவிட்ட பெற்றோல் நிரப்பு நிலைய அருகாமையில் கவனயீர்ப்பு போராட்டம் ஆரம்பமானது. தெரணியகலை சந்தி வரை பதாகைகளை தாங்கிய வண்ணம் நிரந்தர தீர்வுகோரி, உரத்த குரலில் கோஷங்களை எழுப்பியவாறு சென்றனர். பெற்றோர் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பாது மாணவர்களையும் ஆர்ப்பாட்டத்தில் இணைத்திருந்தனர்.

“மண் சரிவு அபாயம்மிக்க பாடசாலைக்கு அனுப்பி எங்கள் பிள்ளைகளை இழக்க விரும்பவில்லை. எங்களுக்கு எங்கள் குழந்தைகளின் எதிர்காலம் முக்கியம். ஆகவே, புதிய காணியில் கட்டப்பட்டு இடைநிறுத்தப்பட்டுள்ள கட்டடத்தை முழுமைப்படுத்தி, பாடசாலை நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்” என்றும் பெற்றோர் வலியுறுத்தினர்.

# நாற்றிசையும் நான்கு நேரங்கள்

ரஞ்சித் ராஜபக்ஷ

உள்ளூர், வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளை கவர்ந்திழுக்கும் ‘சின்ன இங்கிலாந்து’ என்றழைக்கப்படும் நுவரெலியா மாநகரின் மத்தியில் இருக்கும் கடிகாரம், நான்கு திசைகளிலும் வெவ்வேறான நான்கு நேரங்களைக் காண்பிக்கின்றது. இதனால், வெளியிடங்களில் இருந்து நுவரெலியாவுக்குச் செல்வோர் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

நுவரெலியா லயன்ஸ் கிளப்பின் 50ஆவது ஆண்டு நிறைவையொட்டி இந்த



மணிக்கூட்டு கோபுரம் 2019ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டது. அதனை நுவரெலியாக நகர சபை பராமரித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

நான்கு திசைகளிலும் உள்ள மணிக்கூடுகள் பத்து நிமிடங்களுக்கு ஒரு தடவை மாறி, மாறி ஓசை எழுப்புவதால், சுற்றுலாப்பயணிகள், நுகர்வோர் மற்றும் வர்த்தகர்களும் பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாகி வருகின்றனர்.

ஆகையால், நான்கு திசைகளில் இருக்கும் மணிக்கூடுகளிலும் சரியான நேரத்தை வைத்து சரியான மணித்தியாலத்துக்கு ஓசை எழுப்பும் வகையிலான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.







# தங்கமலையில் தீபாவளி

ஹப்புத்தளை, தங்கமலையில் தோட்டங்களுக்கு இடையேயான விளையாட்டு போட்டி, தோட்ட மைதானத்தில் நேற்று (26) இடம்பெற்றது. பலூன் உடைத்தல், தேங்காய் துருவுதல், கிறிஸ் மரமேறுதல், பெண்களுக்கான கையிறு இழுத்தல் எனப் பல போட்டிகள் இடம்பெற்றன. விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுகளை ஹப்புத்தளை பிரதேச சபையின் உறுப்பினர்களான கலை, சகாதேவன், மகேந்திரன், தோட்டத்துறை சாந்தவர்களால் வழங்கி வைக்கப்பட்டன.

# “வந்துவிட்டோம்; வர முடியவில்லை”

சுதத் எச்.எம்.ஹேவா

தீபாவளி கொண்டாட்டத்துக்காக கொழும்பு உள்ளிட்ட பெரும் நகரங்களில் இருந்து பெருந்தோட்டங்கள் உள்ளிட்ட பிரதேசங்களுக்கு வந்திருந்த பெருந்திரளானவர்கள், தொழில் செய்த இடங்களுக்கு திரும்ப முடியாமல் பல்வேறான அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

ஹட்டன் பஸ் நிலையத்துக்கு நேற்று (26) காலையில் பெரும் திரளானவர்கள் வந்துவிட்டனர். எனினும், போதியளவில் பஸ்கள் இன்மையால் நீண்ட நேரமாக,



காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

கடுமையான மழைக்கு மத்தியில் நீண்ட நேரமாக கால்கடுக்க வரிசையில் நிற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது என்றும் காத்திருந்த பயணிகள் தெரிவித்தனர்.

இதுதொடர்பில் கேட்டபோது பதிலளித்த, இலங்கை போக்குவரத்துச் சபையின் ஹட்டன் டிப்போ உதவி முகாமையாளர் (போக்குவரத்து) சமன் ரத்னாயக்க, “பல நாள்களுக்கு முன்னராக கொழும்பு உள்ளிட்ட பிரதேசங்களில் இருந்து ஹட்டன் பிரதேசங்களுக்கு வருகை தந்திருந்தவர்கள், ஹட்டனில் இருந்து திரும்புவதற்கு முயற்சி செய்தனர். அதனால் இவ்வாறானதொரு நெருக்கடி நிலைமை ஏற்பட்டது. எனினும், ஹட்டன் பஸ் நிலையத்துக்கு பயணங்களை மேற்கொள்வதற்காக வந்திருக்கும் சகலருக்கும் போக்குவரத்து ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும்” என்றார்.

# புதிய தவிசாளரானார் கோபாலகிருஸ்ணன்

எஸ்.கணேசன்




அக்கரப்பத்தனை பிரதேச சபைக்கான புதிய தவிசாளராக இராமன் கோபாலகிருஸ்ணன் வாக்கெடுப்பின்றி நேற்று (26) தெரிவு செய்யப்பட்டார்.

ஆளும் கட்சி, எதிர்க்கட்சியென 15 உறுப்பினர்களைக் கொண்ட அக்கரப்பத்தனை பிரதேச சபை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் வசமுள்ளது.

இந்த நிலையில், கடந்த நான்கரை ஆண்டுகளாக தவிசாளர் பதவியை வகித்த எஸ்.கதிர்செல்வன், இராஜினாமா செய்திருந்தார். இருப்பினும் இவரின் பதவி விலகலை தொடர்ந்து ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவை சேர்ந்த ஜெயலத் என்பவர் தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருந்தார்.

எனினும், அக்கரப்பத்தனை பிரதேச சபையின் எஞ்சியுள்ள ஆயுள்காலத்திற்கு நிரந்தரமாக தவிசாளர் ஒருவரை தெரிவு செய்ய வேண்டிய கட்டாய நிலையில் இந்த புதிய தவிசாளர் நியமனம் இடம்பெற்றது.

15 உறுப்பினர்களை கொண்ட சபையில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பங்காளி கட்சியான தொழிலாளர் தேசிய சங்கத்தை சார்ந்த எஸ்.சிவனேஷன், சுதாகர் ஆகியோர் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை; 13 பேர் வாக்களித்தனர்.



# வழமைக்கு திரும்பியது

எஸ்.கணேசன்

தலவாக்கலை - பூண்டுலோயா பிரதான வீதியில், ஒலிரூட் பகுதியில் சரிந்து விழுந்த பாரிய மண்சரிவு அப்புறப்படுத்தப்பட்டுள்ளது. அதன்பின்னர் அவ்வீதியின் ஊடான போக்குவரத்து நேற்று (26) முதல் வழமைக்குத் திரும்பியது.

மண்சரிவை அகற்றி இயல்புநிலை திரும்பும் வரை தலவாக்கலை-பூண்டுலோயா இருவழி பயணிகள் மாற்று வழியை பயன்படுத்தினர்.

நேற்று (26) காலை முதல் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் சரிந்த மண்ணை அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். மதியம் 12.30 மணியளவில் மண்சரிவு அகற்றப்பட்டது.

எனினும், சீரற்ற வானிலை தொடர்ந்தால் மண்சரிவு ஏற்படும் அபாயமிருப்பதால் அவதானமாக வாகனங்களை செலுத்துமாறு சாரதிகள் அறிவுறுத்தப்பட்டனர்.



# பாராட்டி கௌரவிப்பு

2021 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சையில், ஆங்கில மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றி, 3 ஏ சித்திகளைப் பெற்று, பல்கலைக்குத் தெரிவாகிய ‘சிலோன் லேடிஸ் கெம்பஸ்’ தனியார் பாடசாலையின் மாணவி முஹம்மத் அன்வர் பாத்திமா இல்மாவைக் கௌரவிக்கும் நிகழ்வு, வரக்காபொலயில் அமைந்துள்ள சிலோன் லேடிஸ் டெம்பரேச்சில் (22) நடைபெற்றது.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தால் வழங்கப்பட்ட இந்தக் கௌரவிப்பு நிகழ்வில், ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் முன்னாள் தலைவர் என்.எம். அமீன், தலைவி புர்கான் பி இப்திகார் உட்பட அங்கத்தவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

# ஒவ்வொரு நோய் பற்றியும் புரிதல் அவசியமாகும்

தினசரி, திடீரென வெளியாகும் செய்திகளில் பல, மூக்கின் மீது விரலை வைத்து சிந்திக்க தூண்டுவது மட்டுமன்றி, வியப்படையவும் செய்வதாய் இருக்கின்றன. விலையேற்றம், விலைக்குறைப்பை கேட்கவேண்டியதே இல்லை. நாளொரு பொழுதும் பொழுதொரு மேனியும் இடம் பெற்றுக் கொண்டிருக்கிறது. ஆக, விலைக்குறைப்பும் விலையேற்றமும் அன்றாட நிகழ்வுகளில் ஒன்றாகிவிட்டன.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், ஆயிரக்கணக்கான குடும்பப் பெண்கள், விரும்பியோ, விரும்பாமலோ விபசாரத் தொழிலுக்குள் தள்ளப்பட்டுள்ளனர். இன்னும் சிலர், கூவியழைக்கும் விபசாரிகளாக மாறிவிட்டனர். பலர் இரகசியமான முறையில், அத்தொழிலை செய்கின்றனர். சிலர் கையும் மெய்யுமாக மாட்டிக்கொள்கின்றனர்.

இந்நிலையில், இலங்கையில் எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளதாக தேசிய பால்வினை நோய்கள் மற்றும் எயிட்ஸ் பிரசாரத்தின் பணிப்பாளர் வைத்தியர் ரசாஞ்சலி ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்தின் முதல் இரண்டு காலாண்டுகளில், பாதிக்கப்பட்டவர்கள் 148 பேர் இனங்காணப்பட்டனர். அவற்றுடன் ஒப்பிடும் போது, இந்த வருடத்துக்குள் அதன் எண்ணிக்கை இருமடங்காக அதாவது 342 ஆக அதிகரித்துள்ளதாகவும் டொக்டர் ஹெட்டியாராச்சி குறிப்பிட்டார்.

குறிப்பாக, சனநெரிசல் கொண்ட கொழும்பு, கம்பஹா ஆகிய மாவட்டங்களிலேயே அதிகளவான நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். கடந்த ஆண்டு 18-25 வயதுக்குட்பட்ட 25 பேர் பதிவாகியிருந்த நிலையில், இந்த ஆண்டு அதே வயதிற்குட்பட்ட 50 பேர் எச்.ஐ.வி நோயாளிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்த நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு அவசரமாக நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

இளம் வயதினர் மத்தியில் குறிப்பாக, ஆண்களிடையே அதிக எண்ணிக்கையில் பதிவாகியுள்ளது. அதாவது 30 பேர்; இதில் பலர் பாடசாலை மாணவர்கள். இவர்களுடன் பல்கலைக்கழக மாணவர்களும் உள்ளடங்குகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

எச்.ஐ.வி தொற்றுக்குள்ளான பல்கலைக்கழக மாணவர்கள் 14 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அடையாளம் காணப்பட்டவர்களில் இருவர் பௌத்த பிக்குகள் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆகையால், பாடசாலைகளில் சரியான பாலினக் கல்வியின்மை மற்றும் நோய் பற்றிய புரிதல் இன்மையே இந்த நிலைமைக்குக் காரணமென வைத்தியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உயிர்கொல்லி நோயான எச்.ஐ.வியில் இருந்து, தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ளவேண்டும். அத்துடன், இளைஞர், யுவதிகளுக்கு பாலினக் கல்வி தொடர்பிலான போதியளவான விளக்கம் இன்மையும் எச்.ஐ.வி தொற்றாளர்கள் அதிகரிப்பதற்கு பிரதான காரணமாக அமைகின்றது என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் மருந்து தட்டுப்பாடுகளுக்கு மத்தியில், இவ்வாறான உயிர்கொல்லி நோய்கள் தொற்றிக்கொண்டால், மரணத்தை தவிர, மீண்டெழுவதை நினைத்துக்கூட பார்க்கமுடியாது. இளைஞர்கள் மத்தியில் அதிகரித்துக்குச் செல்லும் போதைப்பொருள் பழக்கவழக்கங்களும், பாலியல் ரீதியிலான நோய்கள் தொற்றிக்கொள்வதற்கு பிரதான காரணமாக அமைந்துவிடுகின்றன. ஆகையால், ஒவ்வொரு நோய் பற்றியும் புரிதல் அவசியமாகும் என்பதை வலியுறுத்துகின்றோம்.

தமிழ் Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# ரிஷி சுனக்; நிறவெறிக்கு எதிரான குறியீடு அல்ல



புருஜோத்தமன் தங்கமயில்

பிரித்தானியாவின் புதிய பிரதமராக ரிஷி சுனக் பதவியேற்று இருக்கின்றார். சூரியன் அஸ்தமிக்காத அகண்ட கொலனித்துவ ஆட்சியை, நூற்றாண்டுகளாக செலுத்திய பிரித்தானியாவுக்கு, வெள்ளையர் அல்லாத இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஒருவர் இப்போது பிரதமர் ஆகியிருக்கிறார்.

கறுப்பினத்தவரான பராக் ஒபாமா, அமெரிக்காவின் ஜனாதிபதியானார். அதுவும் அவர் இரண்டு தடவைகள் ஜனாதிபதியாகத் தெரிவாகி, பெரிய நெருக்கடிகள் இன்றி ஆட்சி செலுத்தினார்.

ஆனால், ஒபாமா போன்று ரிஷி சுனக்கால், நெருக்கடிகள் அற்ற ஆட்சியை கொண்டு செலுத்திவிட முடியாது. பிரித்தானியாவின் பொருளாதாரம் பாரிய வீழ்ச்சியைச் சந்தித்திருக்கின்ற நிலையில், அவர் பிரதமர் பதவிக்கு வந்திருக்கிறார். அவருக்கு முந்தைய இரண்டு பிரதமர்களும், நாட்டின் பொருளாதாரத்தை சரிசெய்ய முடியாத நிலையிலேயே பதவி விலகிச் சென்றார்கள்.

ரிஷி சுனக், பிரித்தானியாவின் பிரதமராகப் பதவியேற்கப் போகிறார் என்றதும், பல வகையான எண்ண ஓட்டங்கள் மக்கள் மத்தியில் எழுந்தன. இந்தியாவை அடக்கி ஆண்ட பிரித்தானியாவை ஆள்வதற்காக, இந்திய வம்சாவளி வாரிசு வந்திருக்கிறார் என்று இந்திய ஊடகங்கள் கொண்டாடின.

கர்நாடக மக்களோ, தங்களது மருமகன், பிரித்தானிய பிரதமர் ஆகியிருக்கின்றார் என்று மெச்சிக்கொண்டிருக்கிறார்கள். பிராமண குடிகள், தங்களில் ஒருவராக ரிஷியை அடையாளப்படுத்திக் கொள்கிறார்கள்.

கிறிஸ்தவ நாட்டுக்கு, இந்து மகன் பிரதமராக வந்திருப்பதாகவும் சமூக ஊடகங்களில் பேசப்படுகின்றது.

இவற்றையெல்லாம் தாண்டி, வெளிநாட்டைச் சேர்ந்த ஒருவரை பிரித்தானிய மக்கள் பிரதமராக ஏற்கும் அளவுக்கான மனநிலை, குறிப்பாக நிறவெறியற்ற உணர்நிலை ஏற்பட்டிருப்பதாக வரவேற்புச் செய்திகள் பகிரப்படுகின்றன.

அடிப்படையில், பிரித்தானியா இன்று சந்தித்து நிற்கின்ற பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வதற்கான திராணி, ஆளும் கன்சர்வேடிவ் கட்சிக்குள் இருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்களிடம் இல்லை. அதனால் அவர்கள் பொறுப்பை ஏற்றுக்கொள்வது சார்ந்து தயக்கம் வெளியிடுகிறார்கள். அதுவே, நிறவெறிக்கு எதிரான நிலைக்குள் பிரித்தானியா பெருமளவில் சென்று சேர்ந்து விட்டதாக யாரும் கருத வேண்டியதில்லை.

ரிஷி சுனக்கும் பதவி விலகிச் சென்ற பிரதமர் லிஸ் டிரஸூம் இரண்டு மாதங்களுக்கு முன்னர், கன்சர்வேடிவ் கட்சியின் தலைமைப் பதவிக்கு போட்டியிட்ட போது, பாராளுமன்ற உறுப்பினர்களால் ரிஷி சுனக் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். ஆனால், கட்சியின் உறுப்பினர்கள் மத்தியில் நடத்தப்பட்ட தேர்தலில், லிஸ் டிரஸ் 57 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றார். அந்த வெற்றி நிறவாதம் என்கிற அடிப்படையில் நிகழ்ந்த ஒன்று.

அந்தத் தேர்தலில், தங்களை வெளிநாட்டு வம்சாவளி ஒருவர் ஆட்சி செலுத்துவதை விரும்பவில்லை என்று, கன்சர்வேடிவ் கட்சி உறுப்பினர்களில் பலரும் வெளிப்படையாக கூறியிருந்தார்கள். அதுவும், லிஸ் டிரஸைவிட, ரிஷி சுனக் பொருளாதார சீர்திருத்தத்தை செய்யக்கூடியவர் என்று அறிவித்துக் கொண்டே அவரைத் தோற்கடித்தார்கள். அதற்கு நிறவாதமே காரணமாக இருந்தது. சமூக ஊடகங்களில் இப்போதும் அந்த காணொளிகள் காணக் கிடைக்கின்றன. ஆனால், ரிஷி சுனக்கிடம் பொறுப்பை இப்போது காலம் கையளித்திருக்கின்றது.

ரிஷி சுனக் பிரித்தானிய பிரதமராக பொறுப்பேற்கப் போகிறார் என்றதும், பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் பதவிவொன்றை இட்டிருந்தார். அதில் ஒருபகுதி, “.....பிரதமர் ரிசி சுனக்கின் நாட்டில் நிறவாதம் தோலில் (*Skin Deep*) இருக்கிறது. ஆகவே, அதை மாற்றி எடுக்க முடிகிறது. ஆனால், இங்கே (இலங்கையில்) இனவாதம் ஆன்மாவில் கலந்துள்ளதால் (*Soul Deep*), நம்நாட்டில் நமக்கு முதலிடம் தரத் தயங்குகிறார்கள்....” என்றுள்ளது.

மனோ கணேசனின் ஏக்கம் மிகச் சரியானது. இலங்கையின் ஆட்சி அதிகார கட்டமைப்பு, இனவாதத்தின் வழியாக எழுந்த ஒன்று. அதன் வேர்கள் ஆழமாக ஊடுருவி படர்ந்திருக்கின்றன. அதனை அறுத்துவிட்டு, ஆட்சி அதிகார கட்டமைப்பை ஏற்படுத்துவது என்பது அவ்வளவு இலகுவானது இல்லை.

நாட்டின் பொருளாதாரம் படுபாதாளத்துக்குள் வீழ்ந்திருக்கின்றது. மீட்சி என்பது இப்போதைக்கு சாத்தியமில்லை. நெருக்கடி முழுவதையும், மக்கள் தலையில் சுமக்க வேண்டியிருக்கின்றது. அப்படியான நிலையிலும், குருந்தூர் மலையிலும், திருகோணேச்சர கோவில் வளாகத்திலும் பௌத்த சின்னங்களை அமைத்து, அந்த இடங்களை ஆக்கிரமிக்கும் வேலைகளை அரச கட்டமைப்பு செய்கின்றது.

> **நிறவெறிக்கு அப்பால், வாழ்வு குறித்து கவனம் செலுத்துகிறார்கள். தங்களது வாழ்வை மீட்டெடுப்பதற்கு யார் வந்தால் சரியாக இருக்குமோ அவரைத் தெரிவு செய்கிறார்கள்**

நாட்டின் பொருளாதாரத்தை சரி செய்து, மக்களின் சுமையை குறைப்பதை விடுத்து, ஆக்கிரமிப்பு வேலைகளை செய்வது என்பது, இனவாதத்தின் வேர்கள் செய்வது. பௌத்த சிங்களத்தின் வேர்கள் ஆட்சிக் கட்டமைப்புக்குள் பரந்தளவில் வியாபித்தமையே நாட்டைத் தோற்கடித்தன.

உண்மையில், முன்னோக்கிய வளர்ச்சிப் பயணம் என்பது, தோல்விக்கான காரணங்களைக் அடையாளம் கண்டு கொள்வதன் மூலம் நிகழக் கூடியது. ஆனால், இலங்கை போன்றதொரு நாட்டில், இனவாத -மதவாத வழி ஆட்சி அதிகார கட்டமைப்பின் நிலைப்பு, ஊழல்வாதிகளையும் குற்றவாளிகளையுமே ஆட்சியில் அமர்த்தி அழகு பார்க்கின்றது. அவர்கள், கிடைத்த வரை கொள்ளை அடிப்பதிலேயே குறியாக இருக்கிறார்கள்.

ஆட்சியில் உள்ளவர்கள் எவ்வளவு கொள்ளை அடித்தாலும் பரவாயில்லை; ஆனால், தங்களின் ஆட்சி அதிகாரத்துக்குள் நீளும் இனவாத - மதவாத வேர்களுக்கு பாதகம் ஏற்பட்டுவிடக் கூடாது என்று பௌத்த சிங்கள அடிப்படைவாத சக்திகள் நினைக்கின்றன. இவ்வாறான நிலை, கூட்டுக் களவாணித்தனமாக நீள்கின்றது.

இப்படியான கட்டமைப்புக்குள் நாடு முழுவதுமாக சென்றிருக்கின்ற நிலையில், இலங்கையில் என்றைக்கும் பராக் ஒபாமாக்களோ, ரிஷி சுனக்களோ உருவாக வாய்ப்பில்லை.

‘இலங்கையில் இனவாதம் ஆன்மாவின் கலந்திருக்கின்றது’ என்ற மனோ கணேசனின் பதிவு இன்னும் ஆழப்படுத்தப்பட வேண்டியது. அது, ஆன்மாவைத் தாண்டியும் ஆழமான கட்டங்களில் இனவாதமாக பொதிந்திருக்கின்றது.

எதிரி மக்கள் எனக் கருதும் மக்களை இனவாதம் அழித்து, சொந்த மக்களை காக்கும் என்று நம்பினால் கூட, ‘காட்டாட்சி’ தத்துவத்தின்படி அது ஏற்கக் கூடியது. ஆனால், சொந்த இன மக்களையே கருவறுக்கும் அளவுக்கான இனவாத - மதவாத அடிப்படைகளையே, இலங்கை வெளிப்படுத்தி வந்திருக்கின்றது.

அப்படியான நிலையில், அதனால் ஒரு சில மத வெறிக் கூட்டமும், சில குடும்பங்களும் மாத்திரமே வாழும். மற்றப்படி, நாடு முழுவதுமாக தொடர் தோல்விக்குள் வீழ்ந்து தொலைந்து போகும்.

பிரித்தானிய மக்கள், நிறவெறியை கைவிடும் நிலையில் எல்லாம் முழுவதுமாக இல்லை. ஆனால், நிறவெறிக்கு அப்பால், வாழ்வு என்ற ஒன்று இருப்பது குறித்து கவனம் செலுத்துகிறார்கள்.

தங்களது வாழ்வை மீட்டெடுப்பதற்கு யார் வந்தால் சரியாக இருக்கும் என்று நினைக்கிறார்களோ, அவரைத் தெரிவு செய்ய விளைகிறார்கள். கன்சர்வேடிவ் கட்சியின் தலைமைக்கான தேர்தலில், ரிஷி சுனக் தோற்கடிக்கப்பட்ட போதிலும், இன்றைக்கு அவரை ஏற்கும் நிலை வந்திருக்கின்றது.

நாளையே இன்னொரு தேர்தல் வந்தால், அதில் பிரித்தானியாவின் வெள்ளை நிறவாதம் தலைதூக்கும். அப்போதும், ரிஷியால் அதனைத் தோற்கடித்து வெற்றிபெற முடிந்தால்தான், அது உண்மையான நிறவெறிக்கு எதிரான வெற்றியாக இருக்கும்.

இல்லையென்றால், அது, ‘பசுத்தோல் போர்த்திய புலி’க்கு ஒப்பான நிலைக்குள் பிரித்தானியர்களின் நிறவெறி மறைந்திருப்பதற்கு ஒப்பானதுதான். அப்படியான நிலையில், பிரதமர் பதவியை ரிஷி சுனக் அலங்கரிப்பதை நிறவெறிக்கு எதிரான வெற்றியாக யாரும் பெரியளவில் கொண்டாட வேண்டியதில்லை.

அதுபோல, ரிஷியோடு தங்களை இனமாக, மதமாக, வம்வாவளியாக இணைத்து பெருமை கொள்வதெல்லாம் அபத்தங்களின் உச்சம். அவர் ஓர் அரசியல்வாதி. அரசியல்வாதிக்குரிய குணாதிசயங்களின் வழியாக எழுந்து வந்தவர். அவர் தன்னை நிலைநிறுத்திக் கொள்வதற்காக எதையும் செய்யக் கூடிய ஒருவர். அதனைத்தான் அவரின் கடந்த காலங்கள் உணர்த்தியிருக்கின்றன.

அப்படியான நிலையில், தேவையற்ற பெருமிதங்களால் யாருக்கும் எந்த நன்மையும் இல்லை.



## வாழ்வியல் தரிசனம்

அறியாமைகூட ஒரு போதை நிலைதான். ஒருவரின் அறியாமையை உணர்ந்தவர்கள், அவருக்கு உண்மை நிலையை உணர்த்தினாலும் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். புத்திமதி சொன்னவர்கள் மீது கோபப்படுவார்கள்.

இளம் வயதிலேயே, சில மூடநம்பிக்கைகளைச் சொல்லி வளர்க்கும்போது, அதை ஆழமாக உண்மை என நம்பிவிடுகின்றார்கள். படித்தவர்கள் கூட, சில தவறான கற்பனைக் கதைகளை நம்புவதுண்டு. ஏன், எதற்கு, எப்படி போன்ற கேள்விகளைக் கேட்டால்த்தான், எந்த விடயத்திலும் தெளிவுபிறக்கும்.

புத்திசாலிகளைக்கூட ஏமாற்றும் மனிதர்கள் இருக்கின்றார்கள். இவர்கள் நடிப்பதிலும் பேசுவதிலும் திறமையானவர்கள். இதனால், ஏமாறுபவர்கள் பின்நாள்களில் எவரையும் நம்பாமல் இருப்பதுண்டு.

துஷ்டர்களைக் கண்டால், விலகிவிடுவது நல்லது. எனினும், எதுவும் புரியாமல், அப்பாவிகள் தவறாகப் பேசினால் அதைப் பெரிதுபடுத்தலாகாது.

எமது முன்னோர்கள் அறிவுரீதியாக சொல்வதையும் சிலர் கேலியாக எடுத்துக் கொள்வதுண்டு. தங்கள் மூதாதையரிடம் கற்ற அனுபவங்களைச் சொல்வதை எடுத்தெறிந்து பேசக்கூடாது. இவை வாழ்க்கைப் பாடமாக அமைவன. எதையும் ஆழமாகச் சிந்திக்கவும்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### புதுக்குடியிருப்பு – பரந்தன் வீதியில்

## கோழி கழிவுகளால் அசௌரியம்



முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட புதுக்குடியிருப்பு - பரந்தன் வீதியில், கைவேலி பகுதியில் வீதி ஓரமாக கோழிக்கழிவுகள் கொண்டப்பட்டுள்ளதால் வீதியால் பயணிக்கும் மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றார்கள்.

இறைச்சிக்காக உரிக்கப்படும் கோழியின் கழிவுகள், கைவேலிப் பகுதியின் வயல் நிலங்கள் உள்ள வீதி ஓரமாக, கடந்த சில நாள்களாக கொட்டப்பட்டு வருவதாக மக்கள் தெரிவித்துள்ளார்கள்.

இவ்வாறு கொட்டப்படும் கழிவுகள், மழை காலத்தில் துர்நாற்றம் வீசுவதுடன் அருகில் உள்ள வயல் நிலங்களில் கலக்கின்றன,

ஒரு சிலரின் பொறுப்பற்ற இவ்வாறான செயற்பாட்டால் வீதியால் செல்லமுடியாது, துர்நாற்றம் வீசுவதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றார்கள்.

சம்மந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் எடுத்து, நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

–செ. கீதாஞ்சன்



# மோடியின் காரில் ஏற முயன்ற முதலமைச்சர்

புதுடெல்லி

பிரதமர் மோடியின் காரில் ஏற முயன்ற குஜராத் முதலமைச்சர் பூபேந்திர படேலை தேசிய பாதுகாப்பு படை வீரர் தடுத்தது சர்ச்சையாகி இருக்கிறது.

குஜராத்தில் இந்தாண்டு இறுதியில் சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. தற்போது குஜராத்தில் மீண்டும் ஆட்சியை தக்கவைத்து கொள்ள பாரதிய ஜனதா கட்சி (பா.ஜ.க) தீவிர முயற்சி எடுத்து வருகிறது.

இதற்காக அடிக்கடி பிரதமர் மோடி, குஜராத் சென்று பல ஆயிரம் கோடிக்கான திட்டங்களை தொடங்கி வைத்து, பிரசாரம் செய்து வருகிறார்.

சமீபத்தில் குஜராத்தில் அவர் இரண்டு நாள்கள் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். அப்போது, மோடியின் காரில் ஏற முயன்ற அம்மாநில முதலமைச்சர் பூபேந்திர படேலை, மோடிக்கு பாதுகாப்பு அளிக்கும் தேசிய பாதுகாப்பு படையை சேர்ந்த வீரர் ஒருவர் தடுக்கும் வீடியோ, சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

வீடியோவில், குஜராத் முதலமைச்சர் பிரதமரின் காரில் ஏறமுயல்வதையும் பாதுகாப்பு அதிகாரிகள் படேலை காருக்குள் நுழைய விடாமல் தடுப்பதைக் காணலாம்.

ஒரு மாநிலத்தின் முதலமைச்சர், இவ்வாறு பாதுகாப்பு படை வீரரால் அவமதிக்கப்பட்டது சர்ச்சையாகி இருக்கிறது.

“தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சர் என்ன நிலையை எதிர்கொண்டுள்ளார் என பாருங்கள். பா.ஜ.க முதலமைச்சர், மோடியிடம் இந்த அவமானம் பெற வேண்டும் என்றால், சாமானியர்களின் நிலையை கற்பனை செய்து பாருங்கள்” என்று டுவிட் செய்துள்ளனர்.

அந்த வீடியோவுக்கு கருத்து தெரிவித்த ஆம் ஆத்மி கட்சித் தலைவர் சஞ்சய் சிங், “படேல் சமூகத்தின் மீது மிகுந்த மரியாதை உள்ளது, குஜராத் முதலமைச்சர் காருக்குள் உட்கார விரும்பினார்; ஆனால், காரின் பின்னால் ஓடுங்கள்; நீங்கள் என் பக்கத்தில் உட்காரத் தகுதியற்றவர்” என்று பிரதமர் கூறினார் என்றார்.

படேல் அவமதிக்கப்பட்டதற்கு காங்கிரஸ், ஆம் ஆத்மி உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.



## மனிதாபிமான அடிப்படையில் முபினின் உடல் அடக்கம்

கோவை

கோவையில் கார் வெடிப்பில் உடல் சிதறி பலியான ஜமேசா முபின், உடலை பொறுப்பேற்று அடக்கம் செய்வதற்கு எவரும் முன்வரவில்லை. இதையடுத்து மனிதாபிமான அடிப்படையில் அவரது உடல், கடும் பாதுகாப்புக்கு மத்தியில் அடக்கம் செய்யப்பட்டது.

இந்நிலையில், ஜமேசா முபின் உடல் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு, அவரது மனைவியிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால், உடலை அடக்கம் செய்ய ஜமாத்துகள் முன்வரவில்லை. கோவையின் அனைத்து ஜமாத்துகளும் அமைதியை விரும்புவதால், சமூக விரோத செயலுக்கு திட்டமிட்டது போல் முபினின் மரணம் இருப்பதால், அவரது உடலை அடக்கம் செய்ய முன்வரவில்லை என தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், கோவை பூ மார்கெட் ஜமாத்தில் மனிதாபிமான அடிப்படையில் முபினின் உடல் அடக்கம் செய்யப்பட்டது.



## கார் வெடிப்பு சம்பவம்; கடும் சட்டம் பாய்ந்தது

கோவை

கோவை, உக்கடம் கோட்டைமேட்டில் உள்ள ஈஸ்வரன் கோவில் முன்பு ஞாயிற்றுக்கிழமை (23) கார் வெடிப்பு சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் ஐவர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் ஐவர் மீதும் இந்தியாவில் நடைமுறையில் உள்ள கடுமையான சட்டங்களுள் ஒன்றான சட்டவிரோத செயல்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதற்கிடையே காரில் உடல் கருகி இறந்து கிடந்தது ஜமேஷா முபின் (வயது 29) என்பது தெரியவந்தது. பொறியியல் பட்டதாரியான இவர், பழைய புத்தகங்களை விற்பனை செய்யும் கடை வைத்திருந்தார்.

ஜமேஷா முபினின் வீட்டில் பொலிஸார் சோதனை நடத்தினர். அவரது வீட்டில் இருந்து, பொட்டாசியம் குளோரைட், அலுமினியம் நைட்ரேட், சல்பர் உள்ளிட்ட வெடிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

கண்காணிப்பு கமெரா காட்சிகளை பொலிஸார் ஆய்வு செய்தபோது, அதில் ஜமேஷா முபின் உள்பட 5 பேர் வெள்ளை நிறத்திலான ஒரு மூட்டையை தூக்கிக் கொண்டு வீட்டில் இருந்து வெளியே வரும் காட்சி பதிவாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கன்னத்தில் அறைந்தமைக்கு எதிராக முறைப்பாடு

கொள்ளேகால்

சாம்ராஜ்நகர் மாவட்டம், குண்டலுபேட்டையில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடந்தது. இதில் மாவட்ட பொறுப்பு மந்திரி சோமண்ணா கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அப்போது அவரிடம் ஒரு பெண், தனது குறைகளை சொல்ல முயன்றார். அந்தச் சந்தர்ப்பத்தில் கூட்ட நெரிசல் ஏற்பட்டது. இதனால் அந்த பெண், மந்திரி சோமண்ணா மீது விழ முயன்றதாக தெரிகிறது.

இதைப்பார்த்து ஆத்திரம் அடைந்த மந்திரி சோமண்ணா, அந்த பெண்ணின் கன்னத்தில் அறைந்தார். இந்தத் தாக்குதல் சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இந்த நிலையில் கர்நாடக ராஷ்டிரிய சமிதி கட்சி சார்பில், இந்த விவகாரம் குறித்து குண்டலுபேட்டை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## சர்ச்சையில் சிக்கிய நாணயத்தாள்

புதுடெல்லி

இந்திய நாணயத்தாளில் இலட்சுமி மற்றும் விநாயகரின் படங்கள் இடம்பெற வேண்டும் என புதுடெல்லி முதலமைச்சர் கெஜ்ரிவால், இந்திய பிரதமர் மோடிக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், “நாம் முயற்சிகளை மேற்கொண்டாலும், கடவுள்களின் ஆசி இல்லையென்றால் சில சமயங்களில் நம்முடைய அந்த முயற்சிக்கு பலன் இருக்காது. அதனால், புதிதாக வெளியிடப்படும் நாணயத்தாள்களில் ஒருபுறம் மகாத்மா காந்தி உருவமும், மற்றொருபுறம் பெண் கடவுள் இலட்சுமி மற்றும் விநாயகர் படங்கள் இடம்பெற வேண்டும். இரு தெய்வங்களின் உருவங்கள் நாணயத்தாள்களில் இருப்பது, நாட்டை வளம்பெறச் செய்ய உதவும் எனத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இதற்கு திரிணாமுல் காங்கிரஸ் மற்றும் காங்கிரஸ் கட்சி தரப்பில் இருந்து கடும் எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன.









## தேவாலய அபிஷேகம்

மட்டக்களப்பு, மகிழூர்முனை தூய சதா சகாய அன்னையின் புதிய தேவாலயம் நேர்ந்தளிக்கப்பட்டு, தேவாலய அபிஷேக கூட்டுத் திருப்பலி, மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் யோசப் பொன்னையா ஆண்டகை தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

கூட்டுத் திருப்பலியின்போது, தேவாலயத்தின் பங்கைச் சேர்ந்த பிள்ளைகளுக்கான திருவருட்சாதனங்கள் வழங்கப்பட்டதுடன் தேவாலய நிர்மாணப் பணியை மேற்கொண்ட பொறியிலாளர், ஒப்பந்தக்காரர், தேவாலய நிர்வாக சபையினர் ஆகியோருக்கு நினைவு சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

தொடர்ந்து, அன்னையின் திருச்சூரூப பவனியும் அன்னையும் ஆசீர்வாதமும் இடம்பெற்று அன்னதானமும் வழங்கப்பட்டது.

எம்.எஸ்.எம் நூர்தீன்


















## விழிப்புணர்வுப் பேரணி

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு, வலிவடக்கு பிரதேச சபை, தெல்லிப்பழை உப அலுவலகம், தெல்லிப்பழை பொது நூலகம் என்பவற்றின் ஏற்பாட்டில், தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோவில் முன்றலில் ஆரம்பித்த பேரணி, தெல்லிப்பழை சந்தியில் நிறைவடைந்தது.

போதைப்பொருள் பாவனையை ஒழித்தல், வாசிப்பு பழக்கத்தை ஊக்குவித்தல், பிளாஸ்டிக் பாவனையை குறைத்தல், பாலின சமத்துவத்தை பேணல், இயற்கை விவசாயத்தை ஊக்குவித்தல் போன்ற கோரிக்கைகள் இந்தப் பேரணியில் வலியுறுத்தப்பட்டன.

எம். றொசாந்த்







## புதிய நூலகம்

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி, காத்தான்குடி கல்விக் கோட்டத்திலுள்ள அல் அமீன் வித்தியாலயத்தில் (தேசிய பாடசாலை) நேற்று (26) நூலகம் திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலையில் அதிபர் திருமதி நயிமா சலாம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், காத்தான்குடி நகர சபை தவிசாளர் எஸ்.எச் அஸ்பர், காத்தான்குடி கோட்டக்கல்வி அதிகாரி எம்.எம் கலாவுதீன் உட்பட ஆசிரியர்கள், மாணவிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

அத்துடன், பாடசாலை மாணவிகளுக்கிடையில் நடத்தப்பட்ட விவாதப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவிகளுக்கு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

எம்.எஸ்.எம் நூர்தீன்



## கௌரவம்

புத்தளம் ஸாஹிறா தேசிய கல்லூரியின் பழைய மாணவரும், இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் ஒன்றுக்கு பதவி உயர்வு பெற்றுள்ளவருமான எம்.ஏ.எம் அனீஸைக் கௌரவிக்கும் நிகழ்வு சனிக்கிழமை (22), புத்தளம், இஸ்லாஹிய்யா பெண்கள் அரபுக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வை, ‘கல்வி மேம்பாட்டுக்கும் சீர்திருத்தத்துக்குமான புத்தளம் புத்திஜீவிகள் அமையம்’ (PILLARS) ஒழுங்குசெய்திருந்தது.

முஹம்மது முஸப்பிர்

ஈரான்

# உலகின் மிகவும் அழுக்கான மனிதர் காலமானார்



உலகின் மிக அழுக்கான நபர் எனக் கருதப்படும் ஈரானியர் செவ்வாய்க்கிழமை (25) தனது 94ஆவது வயதில் காலமானார். ஈரானில் தேஜ்கா என்ற கிராமத்தில் வசித்து வந்த அவரை, அப்பகுதி மக்கள் 'அமவ் ஹாஜி' என அழைப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப காலங்களில், பூமியில் குழி தோண்டி அதற்குள் படுத்துறங்கி வந்துள்ள அவருக்கு, அப்பகுதி மக்கள் இணைந்து செங்கல்லால் குடிசை ஒன்றை அமைத்துக் கொடுத்துள்ளனர். அவர் பல காலமாக அதிலேயே தனிமையில் வசித்து வந்துள்ளார்.

மேலும், குளித்தால் நோய் ஏற்பட்டுவிடும் என அவர் அஞ்சியதாகவும் இதனால் தனது இளமைக்காலம் முதல் பல ஆண்டுகாலமாக அவர் குளிக்காமலேயே இருந்து வந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமில்லாது, 2014ஆம் ஆண்டு, 'தெஹ்ரான் டைம்ஸ்' என்ற ஊடகம் வெளியிட்ட செய்தியில், ஹாஜி புதிதாகச் சமைத்த உணவை தவிர்த்து விட்டார் எனவும் அவற்றுக்கு பதிலாக, அழுகிய இறைச்சிகளை உட்கொண்டு வந்துள்ளார் எனவும் விலங்குகளின் கழிவில் இருந்து எடுக்கப்பட்ட பொருட்களை புகைக்கும் வழக்கம் கொண்டிருந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து கடந்த சில மாதங்களுக்கு முன்னர் அக்கிராமவாசிகள் முதன்முறையாக அவரைக் கட்டாயப்படுத்தி குளிக்க வைத்துள்ளனர். இந்த நிலையில், ஹாஜி வயது முதிர்வு காரணமாக மரணம் அடைந்து உள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியா

மன்னர் சார்ள்ஸின் மெழுகு சிலை மீது மீது

## கேக் பூசிய நபர்கள்



பிரித்தானியாவில் மன்னர் சார்ள்ஸ் மற்றும் ராணி கமீலாவின் மெழுகுச் சிலைகள் மீது, இருவர் கேக் பூசிய சம்பவத்தை அடுத்து நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இலண்டனில் 'மேடம் டுசாட்ஸில்' என்ற மெழுகுச் சிலை அருங்காட்சியகம் உள்ளது. குறித்த அருங்காட்சியகத்துக்கு அண்மையில் வருகை தந்த இருவர், அங்கு வைக்கப்பட்டிருந்த மன்னர் சார்ள்ஸ் மற்றும் ராணி கமீலாவின் சிலைகளின் மீது, கேக்கைப் பூசியுள்ளனர். இச்சம்பவத்தால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. இதையடுத்து, இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் நான்கு பேரைக் கைது செய்தனர்.

விசாரணையில், கைதானவர்கள் சமூக செயற்பாட்டாளர்கள் என்றும், பிரித்தானியாவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள எண்ணெய், எரிவாயுவுக்கான புது உரிமங்கள் அனைத்தையும் இரத்தாக்க வேண்டும் என்பதற்காக இவ்வாறு செய்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தமது கோரிக்கைக்கு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் வரை இப் போராட்டம் தொடர்ந்து நடைபெறும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ரஷ்யா



## உக்ரேனுக்கு தொடர்ந்து ஆதரவு அளிப்போம்

### ஜெலன்ஸ்கியிடம் பிரதமர் ரிஷி சுனக் வாக்குறுதி

ரஷ்யாவுடனான போரில், உக்ரேனுக்கு பிரித்தானியா தொடர்ந்து ஆதரவு அளிக்கும் என ரிஷி சுனக் உறுதி அளித்துள்ளார்.

பிரித்தானியாவின் 57ஆவது பிரதமராக கன்சர்வேட்டிவ் கட்சியை சேர்ந்த இந்திய வம்சாவளியான ரிஷி சுனக் தெரிவுசெய்யப்பட்டார். இதையடுத்து ரிஷி சுனக்கிற்கு உலக தலைவர்கள் பலரும் வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் பிரதமராகப் பதவியேற்ற ரிஷி சுனக், தனது முதல் உரையின் போது, "நான் தவறுகளை சரிசெய்ய நியமிக்கப்பட்டேன். நம் நாட்டை வார்த்தைகளால் அல்ல; செயலால் ஒன்றிணைப்பேன்" என்று கூறினார்.

இதையடுத்து ரிஷி சுனக், உக்ரேன் ஜனாதிபதி செலன்ஸ்கியைத் தொடர்பு கொண்டு பேசியுள்ளார். அப்போது அவர் ரஷ்யாவுடனான போரில், உக்ரேனுக்கு பிரித்தானியா தொடர்ந்து ஆதரவு அளிக்கும் என உறுதி அளித்ததாக பிரித்தானிய பிரதமரின் செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா

## கணவர், காதலருடன் ஒரே வீட்டில் வசிக்கும் பெண்



பெண் ஒருவர், தனது கணவர் மற்றும் காதலருடன் ஒரே வீட்டில் வசித்து வருகின்றமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் இந்தியானா மாகாணத்தை சேர்ந்தவர் சாரா நிக்கோல். உடற்பயிற்சியாளரான சாரா, எட்டு ஆண்டுகளுக்கு முன்னர், ரியான் என்பவரைத் திருமணம் செய்துகொண்டார்.

இந்நிலையில், 2020 ஆம் ஆண்டு சாரா தனது முன்னாள் காதலரான ரோனி என்பவருடன் இணைந்து வாழ முடிவு எடுத்துள்ளார். இது குறித்து சாரா தனது கணவரான ரியானுக்கும் தெரியப்படுத்திய நிலையில், அவரும் சாராவின் முன்னாள் காதலருடன் இணைந்து வாழ, சம்மதம் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, மூன்று பேரும் ஒன்றாக இணைந்திருக்கவும் அவர்கள் முடிவு செய்துள்ளனர். அப்படி சமீப காலமாக அவர்கள் இணைந்து வாழ்ந்து வரும் நிலையில், ஒருவருக்கு ஒருவர் மிகவும் ஆதரவாக இருப்பதாக சொல்லப்படுகிறது.

அத்துடன் ரியான், சாரா, ரோனி ஆகிய மூவரும் நன்கு புரிந்துணர்வோடும் விட்டுக்கொடுப்பு, இணக்கத்துடன் வாழ்ந்து வருகின்றனர்.

தனது கணவர் மற்றும் காதலருடன் இருக்கும் புகைப்படங்கள், வீடியோக்களை 'இன்ஸ்டகிராம்' பக்கத்தில் பகிர்ந்து வருகிறார் சாரா.

உகண்டா



## பார்வையற்றோர் பாடசாலையில் தீ விபத்து; 11 பேர் உயிரிழப்பு

உகண்டாவில் முகோனா என்ற இடத்தில் பார்வையற்றோருக்கான பாடசாலை இயங்கி வருகிறது. நேற்று முன்தினம் (25) குறித்த பாடசாலையில் திடீரென தீ பரவல் ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து தகவல் அறிந்ததும் தீயணைப்பு படையினர் விரைந்து சென்று தீயை அணைத்துள்ளனர்.

இருப்பினும் குறித்த தீ விபத்தில் 11 பேர் உடல் கருகி உயிரிழந்துள்ளனர் எனவும் பலர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இவ்விபத்துக்கான காரணம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

பிரான்ஸ்

## ஜிடேனுக்கு மெழுகுச் சிலை



பிரான்ஸ் கால்பந்து அணியின் முன்னாள் ஜாம்பவானான ஜிடேனை கௌரவிக்கும் விதமாக பாரிஸில் உள்ள அருங்காட்சியகத்தில் மெழுகு சிலை அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பார்வையாளர்களுக்காகத் திறந்து வைக்கப்பட்ட அச் சிலையை, ஜிடேன் தனது மனைவியுடனும் பெற்றோருடனும் நேரில் பார்வையிட்டு அருகில் நின்று புகைப்படம் எடுத்துக் கொண்டார்.



இருபதுக்கு 20 உலகக் கிண்ணத் தொடர்:

# அயர்லாந்திடம் தோற்ற இங்கிலாந்து

அவுஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடரில், மெல்பேணில் நேற்று (26) நடைபெற்ற அயர்லாந்துடனான குழு ஒன்று சுப்பர் - 12 போட்டியில் இங்கிலாந்து தோற்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்தின் அணித்தலைவர் ஜொஸ் பட்லர், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில் வேகமான ஆரம்பத்தைப் பெற்ற அயர்லாந்து, மார்க் வூட்டிடம் போல் ஸ்டேர்லிங்கை இழந்தது. பின்னர் அணித்தலைவர் அன்டி போல்பிரயனின் 62 (47), லொர்கன் டக்கரின் 34 (27) ஓட்டங்களால் வேகமாக ஓட்டங்களைப் பெற்ற அயர்லாந்து இறுதி 7 விக்கெட்டுகளையும் 25 ஓட்டங்களுக்குப் பறிகொடுத்து 19.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 157 ஓட்டங்களையே பெற்றது. பந்துவீச்சில், லியம் லிவிங்ஸ்டோன் மற்றும் வூட் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், சாம் கர்ரன் 2 விக்கெட்டுகளையும், பென் ஸ்டோக்ஸ் ஒரு விக்கெடையும் வீழ்த்தினர்.

இந்நிலையில், இங்கிலாந்து அணியானது துடுப்பெடுத்தாடும்போது 14.3 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 105 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது மழை குறுக்கிட்டு போட்டி முடிவுக்கு வந்த நிலையில், டக் வேர்த் லூயிஸ் முறையில் ஐந்து ஓட்டங்களால் அயர்லாந்து வென்றது. துடுப்பாட்டத்தில், மொயின் அலி ஆட்டமிழக்காமல் 24 (12), டேவிட் மலன் 35 (37) ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், ஜொஷ் லிட்டில் 2, ஜோர்ஜ் டொக்ரல், பரி மாக்கார்தி, பியொன் ஹான்ட் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இப்போட்டியின் நாயகனாக போல்பிரயன் தெரிவானார்.

இதேவேளை, மழை காரணமாக ஆப்கானிஸ்தான், நியூசிலாந்துக்கிடையிலான போட்டியானது கைவிடப்பட்டிருந்தது.

இந்நிலையில், சிட்னியில் இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ள குழு இரண்டு போட்டியில் பங்களாதேஷும், தென்னாபிரிக்காவும் மோதவுள்ளதுடன், பிற்பகல் 12.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் நெதர்லாந்தை இந்தியா எதிர்கொள்ளவுள்ளது.



மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டுத்துறையை வலுப்படுத்தி

## தேசியமட்டத்துக்கு தரப்படுத்துவதற்காக விளையாட்டு உபகரணங்கள்

■ க. விஜயரெத்தினம்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலகங்களிலும் நிறுவப்பட்டுள்ள விளையாட்டு குழுக்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வானது, மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தால் கடந்த வருடம் சகல மாவட்டங்களிலும் உள்ள பிரதேச செயலக பிரிவுகள் ரீதியாக 21 வயதுக்குட்பட்ட விளையாட்டு வீர, வீராங்கனைகளின் திறனை அபிவிருத்தி செய்யும் நோக்கில் ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவுகளிலும் தனித்துவம் வாய்ந்த விளையாட்டு குழுவை நிறுவதற்கான செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அந்தவகையில், ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவிலும் விளையாட்டு குழுக்கள் நிறுவப்பட்டு, அதற்கான பயிற்றுவிப்பாளர் தெரிவு செய்யப்பட்டது. இந்த விளையாட்டு குழுக்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வானது மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (விளையாட்டு) திருமதி நவரூபரஞ்ஜினி முகுந்தன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் விளையாட்டுத்துறையுடன் சம்பந்தப்பட்ட வீர, வீராங்கனைகளை வலுப்படுத்தும் வகையில் இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், மாவட்டத்தில் தமது திறமைகளை வெளிப்படுத்தி வரும் வீர, வீராங்கனைகளின் திறமைகளை மேலும் மேம்படுத்தும் வகையில் அவர்களை வலுப்படுத்தி, தேசிய மட்டத்திற்கு கொண்டு சென்று, தேசிய மட்டத்தில் சாதனை புரிவதற்கு ஏற்றவகையில் பயிற்றுவிப்புக்கான முன் நடவடிக்கையாக குறித்த விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன், இதன்போது மாவட்ட செயலக கிரிக்கட் அணியில் விளையாடும் வீரர்களுக்கான சீருடையும் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் கபடி, கால்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், கிரிக்கெட் உட்பட பல விளையாட்டுகளை இதன்மூலம் வலுப்படுத்த முடியும் என நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது.



தேசிய மட்ட குத்துச்சண்டை போட்டியில் பதக்கம் பெற்று

## சாதனை படைத்த வவுனியா மாணவிகள்

■ க. அகரன்

பாடசாலை மாணவர்களுக்கிடையிலான தேசிய மட்ட குத்துச்சண்டை போட்டியில் தங்கம், வெள்ளிப் பதக்கங்களை பெற்று வவுனியா மாவட்ட பாடசாலைகள், குத்துச்சண்டை தேசிய போட்டியில் பதக்கம் பெற்று சாதனை படைத்துள்ளன.

இப்போட்டியில் சிறீராமபுரம் திருஞானசம்பந்தர் வித்தியாலய மாணவிகளான எல். கஜேந்தினி, 57 கிலோ கிராம் பிரிவில் தங்கப் பதக்கத்தையும், யூ. கீர்த்தனா 60 கிலோ கிராம் பிரிவில் தங்கப் பதக்கத்தையும் பெற்றிருந்தனர்.


அதேபோல், சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலய மாணவி எம். வாலசிகா 54 கிலோ கிராம் பிரிவில் வெள்ளிப் பதக்கத்தை பெற்று சாதனை படைத்துள்ளனர்.

பயிற்றுவிப்பாளர் நிக்சன் ரூபராஜ் நெறிப்படுத்தலில் இம்மாணவிகள் தயார்படுத்தப்பட்டு குத்துச்சண்டை தேசிய போட்டியில் மூன்று பதக்கங்களையும் பெற்று பெருமை சேர்த்துள்ளார்கள்.

ஊவா மாகாண விளையாட்டுப் போட்டி

## முதலிடம் பெற்ற பதுளை சரஸ்வதியின் துலஷாந்த்

■ நடராஜா மலர்வேந்தன்



பதுளை, வின்சன்டயஸ் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஊவா மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில் 18 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான 400 மீற்றர் தடை தாண்டல் போட்டியில், பதுளை சரஸ்வதி தேசிய பாடசாலையின் தரம் 11 இல் கல்வி கற்கும் வை. துலக்ஷாந்த் எனும் மாணவன் முதலாமிடத்தையும், 110 மீற்றர் தடை தாண்டல் போட்டியில் மூன்றாமிடத்தையும் பெற்று தேசிய மட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 27 ஒக்டோபர் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.